மதுரை மாவட்டக் கல்வெட்டுகள்

முதல் தொகுதி

மதுரை மாவட்டக் கல்வெட்டுகள்

முதல் தொகுதி

பதிப்பாசிரியர்

தி. ஸ்ரீ. ஸ்ரீதர், இ.ஆ.ப.
சிறப்பு ஆணையர், தொல்லியல் துறை

உதவிப் பதிப்பாசிரியர்கள்

பொ. இராசேந்திரன்

முனைவர் வெ. வேதாசலம்

முனைவர் சொ. சாந்தலிங்கம்

அச்சிட்டோர்

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை
எழும்பூர், சென்னை-600 008

முதற்பதிப்பு 2005
வெளியீடு எண் : 174

அச்சிட்ட தாள் : மேப்லித்தோ
தாள் அளவு : டபுள் டெம்மி 1 × 16

படிகள் : 500
பக்கங்கள் : 390

© தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை

TAMIL NADU STATE DEPARTMENT OF ARCHAEOLOGY
LIBRARY
11788
Date
MADRAS
417.7

மதுரை மாவட்டக் கல்வெட்டுகள்

முதல் தொகுதி

பதிப்பாசிரியர்

தி. ஸ்ரீ. ஸ்ரீதர், இ.ஆ.ப.
சிறப்பு ஆணையர், தொல்லியல் துறை

உதவிப் பதிப்பாசிரியர்கள்

பொ. இராசேந்திரன்
முனைவர் வெ. வேதாசலம்
முனைவர் சொ. சாந்தலிங்கம்

விலை : ரூ.

அச்சிட்டோர்
தமிழ்நாடு அரசு
தொல்லியல் துறை
எழும்பூர் சென்னை-600 008

உள்ளடக்கம்

	பதிப்புரை		
	முன்னுரை	...	ix
	Introduction	...	xvii
	Summary	...	xxvii
1.	திருவாதவூர்	...	1
2.	கச்சிராயன் பட்டி	...	101
3.	கள்ளங்காடு	...	102
4.	அருவிமலை	...	103
5.	தருக்காக்குடி	...	114
6.	கருங்காலக்குடி	...	122
7.	சொக்கலிங்கபுரம்	...	143
8.	மருதூர்	...	167
9.	ஆமூர்	...	171
10.	கொட்டக்குடி	...	181
11.	பனங்காடி	...	182
12.	கூத்தப்பன்பட்டி	...	195
13.	கீழவளவு	...	196
14.	மேலவளவு	...	198
15.	அரிட்டாபட்டி	...	201
16.	பொய்கைக்கரைப்பட்டி	...	206
17.	திருமோகூர்	...	214
18.	யானைமலை	...	244
19.	குன்னத்தூர் மலை (வரிச்சியூர்)	...	283
20.	குன்னத்தூர் மலை	...	289
21.	குன்னத்தூர்	...	297
22.	செங்கோட்டை	...	304
23.	சக்குடி	...	306
24.	புளியங்குளம்	...	307

பதிப்புரை

தென்னிந்திய வரலாற்றை அறிந்து கொள்வதற்கு அடிப்படை ஆதாரமாக இருப்பவை கல்வெட்டுகளே. பண்டைய தமிழ்நாட்டின் அரசியல், சமூகம், பண்பாடு ஆகியவற்றைப் புரிந்து கொள்வதற்கு இக்கல்வெட்டுகளே துணைநிற்கின்றன. வரலாற்றில் பல்வேறு காலகட்டங்களின் நிலையைக் காட்டும் காலத்தின் கண்ணாடியாக இவை திகழ்கின்றன. சி. மீனாட்சி, கே. ஏ. நீலகண்ட சாஸ்திரி, தி. வை. சதாசிவப் பண்டாரத்தார், டி. வி. மகாலிங்கம் போன்ற வரலாற்றுப் பேராசிரியர்கள் கல்வெட்டுக்களை அடிப்படை ஆதாரமாகக் கொண்டே தமிழக வரலாற்றை எழுதியுள்ளனர்.

கல்வெட்டுகளின் அருமை கருதியே கடந்த ஒரு நூற்றாண்டு காலமாகக் கல்வெட்டுகள் படியெடுத்து வரப்பெறுகின்றன. ஆனால் இவற்றை இன்னும் முழுமையாகப் படியெடுத்து வெளியிடும் பணி முற்றுப்பெறவில்லை. இந்நிலையில் தமிழக வரலாற்றை அறியவுதவும் கல்வெட்டுகளைக் காலந்தாழ்த்தாது படியெடுத்து வெளியிட வேண்டியது அவசியமாகிறது.

கல்வெட்டுகளைப் படியெடுப்பதைத் தனது முதன்மை நோக்கங்களில் ஒன்றாகக் கொண்டு தமிழ்நாடு அரசு தொல்லியல்துறை கல்வெட்டுகளைப் படியெடுக்கும் பணிக்கு முன்னுரிமை அளித்து வருகிறது. அண்மையில் தீவிரக் கல்வெட்டு படியெடுக்கும் முனைப்புத் திட்டத்தினை உருவாக்கி அதனை வெற்றி கரமாக நடத்தியும் வருகிறது. இதன் பயனாய் தமிழ்நாட்டில் பல மாவட்டங்களில் கல்வெட்டுகள் படியெடுக்கும் பணி முன் எப்போதும் இல்லாத அளவிற்கு முடுக்கிவிடப்பட்டுள்ளது. பல மாவட்டங்களில் கல்வெட்டுகள் படியெடுக்கும் பணி நிறைவடைந்துள்ளது. குறிப்பாக மதுரை, தேனி, திண்டுக்கல், தஞ்சை, நாகை, திருவாரூர், திருச்சி, பெரம்பலூர், தர்மபுரி, ஈரோடு, கோவை, திருவள்ளூர், கடலூர், கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் இப்பணி கடந்தாண்டு நிறைவு பெற்றது திருப்தியளிக்கிறது. இன்னும் சில மாவட்டங்களில் இப்பணி முடிவடையும் தருவாயில் உள்ளது. தீவிர கல்வெட்டுப் படியெடுக்கும் முனைப்புத் திட்டத்தினால் கடந்த 2005-ஆம் ஆண்டில் பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட கல்வெட்டுகள் படியெடுக்கப்பட்டுள்ளன.

கல்வெட்டுகளைப் படியெடுக்கும் பணியோடு அவற்றைப் படித்து நூலாக வெளியிடும் பணியும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. இதனால் இத்துறையிலிருந்து அண்மையில் பல கல்வெட்டுத் தொகுதிகள் வெளிவரத் தொடங்கியுள்ளன.

இவ்வரிசையில் மதுரை மாவட்டத்தில் மொத்தம் கண்டறியப்பட்ட 1067 கல்வெட்டுகளில் முதற்கட்டமாக 197 கல்வெட்டுகள் இந்த முதல் தொகுதியில் இடம்பெறுகின்றன. ஏற்கனவே 'பாபநாசம் கல்வெட்டுகள்', 'தஞ்சை வட்டக் கல்வெட்டுகள்', 'தமிழகக் கல்வெட்டுகள் 2004' ஆகிய கல்வெட்டுத் தொகுதிகளின் வெளியீடுகள் வந்த நிலையில் இந்த 'மதுரை மாவட்டக் கல்வெட்டுகள்' தொகுதி வெளியிடப்படுகிறது. இது வரலாற்றிற்குத் துணைநிற்கும் அடிப்படைச் சான்றுகளை உள்ளடக்கிய மூல நூலாக விளங்குகிறது.

இந்நூலில் இடம் பெற்றுள்ள கல்வெட்டுகளைத் தமிழகத் தொல்லியல்துறை கல்வெட்டாய்வாளர்கள் திரு. பொ. இராசேந்திரன், முனைவர் வெ. வேதாசலம், இளநிலைக் கல்வெட்டாய்வாளர் திரு. இர. செயராமன் ஆகியோர் வழிகாட்டுதலுடன்இத்துறை கல்வெட்டுப் படியெடுக்கும் பணியாளர்கள் திரு. ம. மதிவாணன், திரு. பெ. முருகேசன், திரு. கு. அன்பழகன், திரு. சி. ஜோதி, திரு. அ. முத்துச்சாமி ஆகியோர் படியெடுத்தனர். முனைவர் சு. இராசகோபால், முனைவர் சொ. சாந்தலிங்கம் ஆகியோர் படித்த கல்வெட்டுகளை மீளாய்வு செய்து இந்நூலாக்கத்தின் பதிப்பினைச் செழுமைப்படுத்தியவர்கள் ஆவார்கள். குறித்த காலத்தில் இந்நூலினை அச்சிட உதவிய தொல்லியல் துறை அச்சுப்பிரிவினர் திரு. ம. கி. குப்புசாமி, திரு. சி. சத்தியவேலு, திரு. மா. ஆ. சங்கர், திருமதி. கோ. செம்மலர், திருமதி. கோ. கீதா, திருமதி. தே. சத்தியவதி, திருமதி. ச. சரஸ்வதி, திருமதி. பா. வசந்தா, திரு. தாமோதரன் ஆகியோர் பாராட்டுக்கு உரியவர்கள் ஆவார்கள்.

இந்நூலினை வெளியிடுவதற்குரிய நிதியினை ஒதுக்கீடு செய்து உதவிய தமிழக அரசுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அரும் முயற்சியால் வெளிவரும் இவ்வரிய கல்வெட்டுத் தொகுப்பு நூலினை வரலாற்று ஆர்வலர்களும் அறிஞர்களும் கல்வெட்டு ஆய்வாளர்களும் பெரிதும் வரவேற்பார்கள் என நம்புகிறேன்.

6-2-2006
சென்னை - 8

(தி. ஸ்ரீ. ஸ்ரீதர்)
சிறப்பு ஆணையர்

முன்னுரை

தமிழ்நாட்டில் உள்ள அனைத்துக் கல்வெட்டுக்களையும் முனைப்புடன் படியெடுத்து அவற்றை விரைவில் வெளியிட வேண்டும் என்ற நோக்கில் தமிழ்நாடு அரசின் தொல்லியல்துறை செயல்பட்டு வருகிறது. அண்மையில் தமிழகமெங்கும் தீவிரக் கல்வெட்டுப் படியெடுக்கும் முனைப்புத் திட்டம் மேற்கொள்ளப்பட்டுத் தமிழகக் கல்வெட்டுகள் படியெடுக்கப்பட்டு படியெடுக்கப் பட்ட கல்வெட்டுகள் உடனுக்குடன் படிக்கப்பட்டு கல்வெட்டுத் தொகுதிகளும் தொடர்ந்து இத்துறையால் வெளியிடப்பட்டு வரப்பெறுகின்றன. இவ்வரிசையில் மதுரை மாவட்டத்தில் படியெடுக்கப்பட்ட கல்வெட்டுகளின் முதல் தொகுதியாக இந்நூல் வெளிவருகிறது. இதனில் உள்ள தமிழ்-பிராமி, வட்டெழுத்து, கிரந்தம், தமிழ், ஆங்கிலம் ஆகிய எழுத்துக்களாலான சுமார் 200 கல்வெட்டுகள் கி.மு. 2-ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 19-ஆம் நூற்றாண்டு வரையிலான பல அரிய செய்திகளைக் கொண்டுள்ளன. இத்தொகுதியில் மேலூர், மதுரை வடக்கு முதலிய வட்டங்களில் படியெடுக்கப்பட்ட கல்வெட்டுகள் பதிப்பிக்கப்பட்டுள்ளன. அவை மேலூர் வட்டத்திலுள்ள திருவாதவூர், கச்சிராயன்பட்டி, கள்ளங்காடு, அருவிமலை, தர்க்காகுடி, சொக்க லிங்கபுரம், பனையூர், மருதூர், ஆமூர், கொட்டக்குடி, பனங்காடி, கூத்தப்பன்பட்டி, கோட்டை நத்தம்பட்டி, கீழவளவு, மேலவளவு, அரிட்டாபட்டி, பொய்கைக்கரைப்பட்டி முதலிய ஊர்களிலும் மதுரைவடக்கு வட்டத்திலுள்ள திருமோகூர், யானைமலை, குன்னத்தூர், செங்கோட்டை, சக்குடி முதலிய ஊர்களிலும் உள்ளவை ஆகும்.

திருவாதவூர் கல்வெட்டுகள்

சமயச் சிறப்பு வாய்ந்த திருவாதவூர் சைவசமயக் குரவர்களில் ஒருவரான மாணிக்கவாசகர் பிறந்த தலமாகும். இங்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழ்-பிராமி கல்வெட்டுகளைக் கொண்ட சமணர் குகைத்தளமுள்ள குன்று ஒன்றுள்ளது. திருவாதவூர் திருமறைநாதசுவாமி கோயிலிலும், மடைவளாக வீதியிலும், பாசன ஏரியிலும் பிற்காலப்பாண்டியர், நாயக்கர், ஆங்கிலேயர் காலக் கல்வெட்டுகள் உள்ளன. இவற்றில் பழமையானது கி.பி. 12-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த வீரபாண்டியன் கல்வெட்டாகும் இவன் நெட்டூரில் மூன்றாம் குலோத்துங்க சோழனால் முறியடிக் கப்பட்டவன் 'பூமருவிய திருமாதும்' என்று தொடங்கும் மெய்க்கீர்த்தியுடன் கூடிய இவனது கல்வெட்டு திருவாதவூர் சிவன் கோயிலில் (46/2003) உள்ளது. திருவாதவூர் 'தென்பறப்பு நாடு' என்றழைக்கப்பட்ட பண்டைய உள்நாட்டுப் பிரிவில் இருந்துள்ளது.

முதலாம் மற்றும் இரண்டாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன், சடையவர்மன் குலசேகர பாண்டியன், மாறவர்மன் வீரபாண்டியன், முதலாம் மாறவர்மன் குலசேகரபாண்டியன் ஆகியோரது கல்வெட்டுகள் திருமறைநாதசுவாமி கோயிலில் காணப்படுகின்றன. இவற்றோடு மதுரை சுல்தானியர்கள் காலத்தில் கி.பி. 14-ஆம் நூற்றாண்டில் ஆட்சிபுரிந்த சடையவர்மன் பராக்கிரம பாண்டியனின் கல்வெட்டுகளும் உள்ளன (3-6/2003).

வெள்ளான்வகை நிலங்களைப் பெற்றிருந்த ஊரார் மற்றும் நாட்டார் இப்பகுதிகளில் மேற்கொண்ட நடவடிக்கைகள் பற்றி திருவாதவூர்க் கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன. இவர்களோடு உறவுகொண்டிருந்த பிரமதேய சபையார் பற்றியும் கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன, பிற்காலப்

பாண்டியர் காலத்தில் வெள்ளான்வகை ஊர்கள் பல கோயிலுக்கு வரி நீக்கித் தானமாகத் தரப் பட்டுள்ளன. இவை நல்லூர் என்ற பின்னொட்டுடன் அழைக்கப்பட்டன. வேதநாயகநல்லூர், வலங்கைமிகாமநல்லூர், பள்ளிக்குறிச்சியான வோணாடு கொண்ட பெருமாள்நல்லூர், திருமறை நாயகநல்லூர், வேலங்குடியான தேவர்கள்தேவநல்லூர், செங்குளமான நாற்பத்தெண்ணாயிர நல்லூர், காமர்மங்கலமான மாகேஸ்வரநல்லூர், மண்டலிகெம்பிரநல்லூர் என்று பல நல்லூர்களின் பெயர்கள் திருவாதவூர் கல்வெட்டுகளில் அறியப்படுகின்றன.

திருவாதவூர்ப் பகுதியில் போர்த்தொழில் செய்யும் குடியினர்க்குரிய ஊர்களும் இருந்தன. இதனை மானியமாகப் பெற்றவர்கள் அரசன் வேண்டும்போது படைவீரராகப் போருக்குச் செல்ல வேண்டும். இவ்வாறு படைத்தொழிலுக்காக மானியமாக அளிக்கப்பட்ட ஊர்கள் படைப்பற்று என்று அழைக்கப்பட்டன. இவற்றை நிர்வகித்தவர்கள் 'படைக்காரணவர்' என்று அழைக்கப் பட்டனர். திருவாதவூர்ப் பகுதியில் இலுப்பைக்குடி, பள்ளிக்குறிச்சி என்று இரண்டு 'படைப்பற்று' ஊர்கள் இருந்துள்ளன (47/2003). ஊர்களின் தன்மைக்கு ஏற்றமுறையிலும், தொழில்களுக்குரிய முறையிலும் நிலங்களின் தரங்களுக்கு ஏற்ற முறையிலும் பயிர்வகைகளுக்குரிய முறையிலும் பல்வேறு விதமான வரிகள் வாங்கப்பட்டுள்ளதைக் கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன. கடமை, அந்தராயம், பொன்வரி, கோவில்வினியோகம், ஊர்வினியோகம், தரவுகுழி, கார்த்திகைப் பச்சைபிள்ளையார் நோன்பு, கூற்றிலக்கை, கடைகூட்டிலக்கை, ஆனைசாலை, குதிரைப்பந்தி, சந்திவிக்கிரகம், பஞ்சுபீலி என்று இவை திருவாதவூர் கல்வெட்டுகளில் குறிப்பிடப்படுகின்றன.

பிற்காலப்பாண்டியர் காலத்தில் 'நாடாள்வான்' என்ற பெயரில் அரசியல் அலுவர்களாகச் சிற்றரசர் மரபினர் உள்நாட்டுப் பிரிவுகளில் பணியாற்றியிருக்கின்றனர். அரசனுக்கும் ஊர்களுக்கும் இடையே தொடர்பாளராக இவர்கள் செயல்பட்டிருக்கின்றனர். ஊர்களிலிருந்து வரிவசூல் செய்தல், அரசனது வரிவிலக்கு தொடர்பான ஆணைகளை நிறைவேற்றல் முதலிய பணிகளை இவர்கள் செய்தனர். திருவாதவூர் பகுதியில் செயங்கொண்ட சோழ சிவல்லபனான களவழி நாடாள்வான் என்பவன் ஊர்களிடையே அரசஅலுவலனாகச் செயல்பட்டதைச் சடையவர்மன் குலசேகரபாண்டியனின் திருவாதவூர் கல்வெட்டு தெரிவிக்கிறது. (37/2003).

திருவாதவூர் கல்வெட்டுகள் பெரும்பாலும் கோயிலுக்குக் கொடையளித்தது பற்றியவை யாகும். இவற்றின் மூலம் நிலவுரிமைகள், நிலவுடமையாளர்க்கும் கோயிலுக்கும் உள்ள தொடர்புகள், பல்வேறு சமூகப்பிரிவுகள் அவற்றின் அடுக்குமுறைகள் பற்றி அறிந்துகொள்ள முடிகிறது. அரசனின் பெயரால் திருவாதவூர் திருமறைநாதசுவாமி கோயிலில் ஏற்படுத்தப்பட்ட சிறப்புபூசைகள் 'சேரனை வென்றான் சந்தி', 'வலங்கைமீகாமன் சந்தி' என்று கல்வெட்டுகளில் குறிப்பிடப்படுகின்றன (9,16/2003).

அறுபத்துமூன்று நாயன்மார்களுக்காக திருவாதவூர் கோயில் மேற்குப்புற திருச்சுற்றில் ஆலயம் போன்ற பகுதி ஒன்று கி.பி. 13.ஆம் நூற்றாண்டில் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. அங்கு சுவற்றில் இருந்த அறுபத்து மூவர் சிற்பங்கள் இன்று இல்லை. ஆனால் அச்சிற்பங்களுக்கு மேலே சுவரில் பொறிக்கப்பட்ட அறுபத்துமூவரில் ஐம்பத்தெண்மர் பெயர்கள் மட்டும் பதிமூன்றாம் நூற்றாண்டு எழுத்தமையில் இன்றும் காணத்தக்க வகையில் கல்வெட்டாகக் காட்சியளிக்கின்றன (21/2003). 12-ஆம் நூற்றாண்டில் பெரியபுராணம் இயற்றப்பட்டு மக்களிடையே நாயன்மார் கதைகள் விரிவாகச் சென்றடைந்ததின் காரணமாக நாயன்மார் வழிபாடு அடுத்த நூற்றாண்டில் சிறப்புப் பெற்றமையை இது காட்டுகிறது. திருவாதவூரில் முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன்

காலத்தில் சைவமடம் ஒன்று இருந்துள்ளது. இதன் தலைவராகப் பராக்கிரமதேவர் இருந்துள்ளார். அம்பலத்தாடி என்ற ஊர் இம்மடத்திற்காக வரிநீக்கி அளிக்கப்பட்டுள்ளது (57/2003).

மூன்றாம் குலோத்துங்கசோழன் மற்றும் முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியனின் கல்வெட்டுகள் திருவாதவூர் பாசன ஏரியின் மடைத்தூணில் கண்டறியப்பட்டன. இவற்றில் சோழரது கல்வெட்டு, மூன்றாம் குலோத்துங்கன் பாண்டிய நாட்டின் மீது படையெடுத்து வெற்றி கண்ட போரில் கலந்துகொண்ட அதிகாரி மங்கலக்கோன் பாஞ்சாலராஜன் என்பவன் திருவாதவூர் பாசன ஏரியில் தன் பெயரால் மடையமைத்ததைத் தெரிவிக்கிறது (58/2003). அதன் பின்பு சோழநாட்டை வெற்றிகண்ட சுந்தரபாண்டியன் காலத்தில் இம்மடையை அவனது அதிகாரி விரதமுடிச்சானான பராக்கிரமசிங்கதேவன் என்பவன் திருத்தியமைத்ததை மற்றொரு கல்வெட்டு கூறுகிறது (59/2003).

செக்கு கல்வெட்டு

தமிழ்நாட்டிலுள்ள பலவூர்களில் கல்லாலான கல்வெட்டு பொறித்த செக்குகள் கிடைத்துள்ளன. மதுரை மாவட்டத்து மேலூர் வட்டத்திலுள்ள கச்சிராயன்பட்டியிலும் வட்டெழுத்துப் பொறித்த கி.பி. 10-ஆம் நூற்றாண்டு கல்செக்கு ஒன்று கிடைத்துள்ளது, இது தற்பொழுது திருமலை நாயக்கர் அரண்மனையில் உள்ளது. வழுதிவளநாட்டிலுள்ள மிழலூரினைச் சார்ந்த அப்பனூழன் என்பவன் 'பொறற்கொடிவீரர்' என்ற வீரர் குழுவின் பெயரால் இச்செக்கினைச் செய்வித்ததாக அதிலுள்ள கல்வெட்டு தெரிவிக்கிறது (61/2003), வழுதிவளநாடு என்பது ஸ்ரீவைகுண்டம் வட்டதைச் சார்ந்த பழமையான உள்நாட்டுப் பிரிவாகும். இந்நாட்டில் இருந்த அப்பனூழன் பாண்டிய நாட்டின் வடபகுதிக்கு வந்து இச்செக்கினைச் செய்வித்துள்ளது குறிப்பிடத்தக்கது. பாண்டியநாட்டில் 'வீரக்கொடியார் பெயரில் வீரர்குழுவினர் இருந்திருக்கின்றனர். எனவே படைப் பிரிவில்'கொடிவீரர்' பிரிவு ஒன்று இருந்தமை இதன்மூலம் தெளிவாகிறது.

அருவிமலை கல்வெட்டுகள்

வஞ்சி நகரத்திற்கு அருகிலுள்ள சிறுகுன்றின் உச்சியில் இடிந்துபோன பிற்காலப்பாண்டியர் சிவன் கோயில் ஒன்றின் கட்டடப்பகுதியிலும் அருகிலுள்ள பாறையிலும் பிற்காலப்பாண்டியர் கல்வெட்டுகள் காணப்படுகின்றன. குலசேகரபாண்டியன் காலத்தில் இச்சிவன்கோயில் கட்டப்பட்டு அதற்குப் பலகொடைகள் அளித்ததைக் இக்கல்வெட்டுகள் கூறுகின்றன. இக்கோயில், கல்வெட்டில் திருமேலழகிய பாண்டிய நாயனார் கோயில் என்று அழைக்கப்படுகிறது. இம்மலையைச் சார்ந்த ஊர் அருவிக்குடி என்று குறிப்பிடப்படுகிறது. அருவிக்குடிப் பகுதியில் வாழ்ந்த கண்மாளர் சமூகத்தினைச் சார்ந்தவர்கள் அரசனுடனும் கோயிலுடனும் தொடர்புடையவர்கள். இவர்களில் பல தட்டார்களின் பெயர்கள் அருவிமலைக் கல்வெட்டுகளில் குறிப்பிடப்படுடன்றன (64/2003).

தர்க்காகுடி கல்வெட்டுகள்

மேலூர் வட்டத்தில் மற்றொரு பிற்காலப் பாண்டியர் கோயில் தர்க்காகுடியில் உள்ளது. இதில் கி.பி. 14 - ஆம் நூற்றாண்டைச் சார்ந்த பாண்டிய மன்னனான பராக்கிரமபாண்டியன், விசயநகரவேந்தனான சதாசிவராயர் ஆகியோர் கல்வெட்டுகள் உள்ளன. (69, 70, 71/2003). கல்வெட்டுகளில் இவ்வூர் தருக்காய்குடி என்றும், கோயில், திருக்கோடீசுவரமுடையார் கோயில் என்றும் குறிப்பிடப்படுகின்றன. இங்குள்ள கல்வெட்டுகள் கோயிலுக்கு அளிக்கப்பட்ட தானங்கள் ஊரார், நாட்டார் நடவடிக்கைகள் பற்றித் தெரிவிக்கின்றன. இக்கோயிலின் பகுதியில் இருந்து அழிவுற்ற அம்மன்கோயிலை அருவியூர் நகரத்தார் எடுத்ததை சதாசிவராயர் கல்வெட்டு கூறுகிறது (71/2003). கல்வெட்டில் இவ்வம்மன் 'திருக்காமகோட்ட திருமாமடந்தையார்' என்று குறிப்பிடப்

படுகின்றார். தருக்காகுடி கோயில் வளாகத்தில் நடப்பட்டுள்ள தனிக்கல்லில் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டு தர்க்காகுடியோடு தொடர்புடைய கடகமறுக்கிகள் என்ற வீரர் குழுவினர் இவ்வூருக்குப் பாதுகாவலாக இருந்ததைத் தெரிவிக்கிறது (73/2003).

கருங்காலக்குடி கல்வெட்டுகள்

கருங்காலக்குடியிலுள்ள பஞ்சபாண்டவர் படுக்கை என்றழைக்கப்படும் சமணமுனிவர்களுக்குரிய கற்படுக்கைகள் உள்ள குகைத்தளம் ஒன்று அதனை உருவாக்கியவரைக் குறிப்பிடும் தமிழ்-பிராமி கல்வெட்டோடு காணப்படுகிறது, இப்பள்ளியின் பாறையில் கி.பி. 9-10 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த அச்சணந்தி என்ற சமணமுனிவரால் செய்யப்பட்ட தீர்த்தங்கரரின் சிற்பம் ஒன்று உள்ளது (76/2003). இதனடியில் உள்ள வட்டெழுத்துக் கல்வெட்டு அச்சணந்தி அதனைச் செய்வித்ததைத் தெரிவிக்கிறது. அச்சணந்தி பாண்டிய நாட்டில் வாழ்ந்த புகழ்பெற்ற சமணமுனிவர்களில் ஒருவர் ஆவார். அரிட்டாபட்டி, ஆனைமலை, அழகர்மலை, கீழவளவு, சிதறால், உத்தமபாளையம் போன்ற பல இடங்களில் இவர் பாறையில் தீர்த்தங்கரர் சிற்பங்களைச் செய்வித்துள்ளார். இடைக்காலத்தில் பாண்டிய நாட்டில் சமணம் வளர்வதற்கு இவர் உறுதுணை புரிந்துள்ளார். கருங்காலக்குடி சமணப்பள்ளியுள்ள முற்காலப்பாண்டியர் கால வட்டெழுத்துப் பாடல் கல்வெட்டு ‘பள்ளித்தரையன்’ என்ற பாண்டிய அரசனின் அதிகாரியின் செயல்களை எடுத்துக் கூறுகிறது (75/2003).

கருங்காலக்குடிக்கு அருகிலுள்ள வயலிப்பாறையினை ஒட்டிய பகுதிகளில் பாசனஏரி குறித்த கல்வெட்டுகள் கண்டறியப்பட்டன. இவற்றில் ஒன்று மாடக்குடையான் சீராளன் திருவெண்காடுடையரன் என்ற கணக்கன் ஒருவன் ஏரியின் கலிங்கினைப் பிற்காலப் பாண்டியர் காலத்தில் செய்வித்துள்ளதைக் கூறுகிறது (77/2003). இங்குள்ள ஏரியின் மடைக்கல்லில் உள்ள கல்வெட்டு (கி.பி. 18ஆம் நூற்றாண்டு) அம்மடையினை வத்தலைராவுத்தர் என்ற இசுலாமியர் திருத்தியமைத்ததைத் தெரிவிக்கிறது (79/2003)

வயலிப்பாறையின் கல்வெட்டு இப்பகுதியில் கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் மாமரங்களை நட்டதைக் கூறுகின்றது (78/2003). உப்புச்சுனை என்றழைக்கப்பட்ட சுனையை ஒட்டி உள்ள பாறைக் கல்வெட்டுகள் இப்பகுதியில் நாயக்கர்காலத்தில் பாளையக்காரனாக இருந்த இலிங்கம நாயக்கன் காலத்ததைச் சார்ந்தவையாகும் (80/812003).

சொக்கலிங்கபுரம் கல்வெட்டுகள்

கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் எடுப்பிக்கப்பட்ட சிவன்கோயில் என்று சொக்கலிங்கபுரத்தில் உள்ளது. சுரநாட்டு மேல்மலையூர் அழகியசேஂசுவரமுடைய நாயனார் கோயில் என்று இங்குள்ள சிவன்கோயிலைக் கல்வெட்டு குறிப்பிடுகிறது (91/2003). இங்குள்ள கல்வெட்டுகள் கோயிலுக்கு அளிக்கப்பட்ட இறையிலி நிலங்கள் அவற்றிற்கான வரிகள். வரிசெலுத்தாதவர் குறித்து எடுக்கப் பட்ட நடவடிக்கைகள் பற்றிய விவரங்களை விரிவாகக் கூறுகின்றன (95/982003).

மருதூர்

மருதூரில் கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட பெருமாள்கோயில் ஒன்று உள்ளது. சிதைவுற்ற நிலையில் உள்ள இக்கோயில் கல்வெட்டு ‘கண்ணாழ்வார் கோயில்’ என்றழைக்கப் பட்ட இக்கோயிலுக்குத் திருநாராயண நல்லூர் தேவதான இறையிலியாக அளிக்கப்பட்டதைக் கூறுகிறது (104/2003). மேலும் ‘மலைக்குடி மலைமேல்கோல்’ என்ற நில அளவுகோல் பற்றி மற்றொரு கல்வெட்டு தெரிவிக்கிறது (103/2003). இக்கோலின் அளவு சோழவந்தானை

அடுத்துள்ள தென்கரை மூலநாதசுவாமி கோயிலின் மகாமண்டபச் சுவரிலும் படமாகப் பொறிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

ஆமூர்

ஆமூரிலுள்ள பிற்காலப்பாண்டியர் சிவன்கோயிலை முதலாம் சடையவர்மன் குலசேகர பாண்டியன் கரலத்தில் தென்னிந்தியாவில் புகழ்பெற்று விளங்கிய திசையாயிரத்து ஐஞ்நூற்றுவர் என்ற வணிகர் குழுவினர் கட்டியுள்ளனர். தக்கணப்பிரதேசத்தில் அய்ஹோளே என்று அழைக்கப் பட்ட ஊரில் இக்குழுவினர் இருந்துள்ளனர். அங்கிருந்து பலவிடங்களுக்கும் சென்றுள்ளனர். அய்ஹோளே என்பதே அய்யப்பொழில் என்று பெயரிடப்பட்டிருக்கிறது. கல்வெட்டுகளில் ஆமூர் 'நல்லணி ஆமூர்' என்று குறிப்பிடப்படுகிறது. இக்கோயிலில் செம்பியன் பல்லவரையன் என்ற அதிகாரி முதலாம் சடையவர்மன் குலசேகரபாண்டியன் காலத்தில் பள்ளியறை நாச்சி யாரைச் செய்தளித்துள்ளான் (106/2003). ஆமூர் கண்மாய் வட்டெழுத்துக் கல்வெட்டில் கி.பி. 9-10ஆம் நூற்றாண்டில் பாண்டியனது அதிகாரியாக விளங்கிய கலிதீரன் தந்தை சாத்தன் குறிப்பிடப்படுகின்றான் (110/2003).

பனங்காடி

பனங்காடியிலுள்ள விஷ்ணுகோயில் கல்வெட்டின் மூலம் இங்குள்ள பெருமாள்கோயில் கி.பி. பதினோராம் நூற்றாண்டில் சோழர் காலத்தில் எடுப்பிக்கப்பட்டுப் பிற்காலப் பாண்டியர் காலத்தில் திருத்திக் கட்டப்பட்டிருக்கிறது என அறிகின்றோம். இதில் முதலாம் சடையவர்மன் குலசேகரபாண்டியன், மாறவர்மன் சுந்தரபாண்டியன் ஆகியோரது கல்வெட்டுகள் உள்ளன. இவ்வூர் இராசேந்திரசோழச் சதுர்வேதிமங்கலம் என்ற பெயரில் பிரமதேயமாக விளங்கியுள்ளது. இது பலசேரிகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. அவை வானவன்மாதேவிசேரி, சுந்தரசோழச்சேரி, இராசேந்திரசோழசேரி என்று அழைக்கப்பட்டன (112/2003). அழகர்கோயிலில் சக்கரத்தாழ்வாரின் சிற்றாலயம் ஒன்றினை அமைத்ததை இங்குள்ள கல்வெட்டு ஒன்று தெரிவிப்பது குறிப்பிடத்தக்கது (115/2003). களவழிநாடாழ்வான் இவ்வூர்க் கோயிலில் பரதேசிகளுக்கு உணவு அளிப்பது தொடர்பானஆணையைக் கோயில் நிர்வாகத்தினர்க்கு அனுப்பிவைத்ததை கல்வெட்டு ஒன்று தெரிவிக்கிறது(114/2003).

உரல் கட்வெட்டுகள்

கீழவளவிலுள்ள சமணப்பள்ளியில் ஸ்ரீகட்டி, காளந்அரட்டி உரலில், என்று பொறிக்கப்பட்ட கி.பி 9-10-ஆம் நூற்றாண்டு கல்வெட்டுகள் கண்டறியப்பட்டன (118/2003). இவை சமண முனிவர்கள் மருந்தினை இடிப்பதற்காகப பயன்பட்டிருக்க வேண்டும்.

பறம்புக்கண்மாய்

மேலவளவிற்கு அருகிலுள்ள பறம்புக்கண்மாய் கல்வெட்டுக்கள் பாசனஏரி அமைப்பதையும் நிர்வகிப்பதையும் பற்றித் தெரிவிக்கும் முக்கிய கல்வெட்டுகளாகும். இங்குள்ள சோணாடு கொண்டருளிய சுந்தரபாண்டியன் கல்வெட்டு தென்பறப்புநாட்டுப் பறம்பான திருநாராயண மங்கலத்து குளத்தின் கரையினை ஆள்வான் சக்கரக்கையன் என்பவன் உயர்த்தியதையும் அதன் உள்வாய்ப் பகுதியில் கரைகுலையாமல் (அழியாமல்) கருங்கற்கள் பதித்து கலிங்கு அமைத்ததையும் தெரிவிக்கிறது (120/2003). இங்குள்ள விசயநகரவேந்தர் விருபாக்சராயர் கல்வெட்டு திருநாராயணமங்கலத்துக் குளத்தினைக் காத்து நீர்அடைத்து திறக்கும் பணி செய்ய திருநாராயண சம்பான் என்பவனை நியமித்ததைத் தெரிவிக்கிறது. இதற்காக ஊரில் விளையும் நெல்லிலிருத்து

ஒருமா நிலத்திற்கு ஏழு நெற்கட்டுகள் ஊதியமாக அளித்துவர ஏற்பாடு செய்யப்பட்டது குறிப்பிடத் தக்கது (121/2003).

அரிட்டாபட்டி

கல்வெட்டுக்களில் திருப்பிணையன்மலை என்று அழைக்கப்படும் அரிட்டாபட்டி குன்றிலுள்ள சமணர் குகைத்தளத்தில் கி.மு. 2-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த மற்றொரு தமிழ்-பிராமி கல்வெட்டு கல்வெட்டு படியெடுக்கும் முகாமின்போது கண்டறியப்பட்டது. இலஞ்சி இளம் பேராதன் மகன் இமையன் முனிவர்களுக்கு உறைவிடம் அமைத்துக் கொடுத்ததை இக்கல்வெட்டு தெரிவிக்கிறது (122/2003). இன்று அரிட்டாபட்டி என்று அழைக்கப்படும் ஊர் பாதிரிக்குடி என்று பழங்காலத்தில் அழைக்கப்பட்டுள்ளது. இது வணிக நகரமாக விளக்கியுள்ளது இவ்வூரில் கண்டறியப் பட்ட விக்கிரமபாண்டியன் கல்வெட்டு இதனைப் பாதிரிக்குடியான ஐஞ்நூற்றுவப் பெருந்தெரு என்று குறிப்பிடுகிறது (125/2003).

பொய்கைக்கரைப்பட்டி

இவ்வூரில் படியெடுக்கப்பட்ட அறுவகைத் தொழில் செய்யும் நால்வகை இரதகாரர்களின் மெய்க்கீர்த்தியுடன் கூடியகல்வெட்டு வாசகம் இத்தொகுதியில் இடம் பெற்றுள்ளது குறிப்பிடத் தக்கது. பவித்திரமாணிக்கபுரத்தில் இருக்கும் இவர்கள் கூட்டம் நடத்தி திருமாலிருஞ்சோலையில் தெய்வகாரியங்கள் செய்த அவர்கள் சமூகத்தினைச் சார்ந்த ஒரு பெரியவருக்கு மரியாதை செய்ததை இது தெரிவிக்கிறது (126/2003).

திருமோகூர் கல்வெட்டுகள்

திருமோகூர் காளமேகப்பெருமாள் கோயிலில் உள்ள கல்வெட்டுகளின் வாசகங்கள் முதல் முதலாக இங்கு வெளியிடப்படுகின்றன. இக்கோயிலின் பகுதிகளைக் கட்டியவர்கள் பெயர்களும், தானம் அளித்தவர் பெயர்களும் உள்ள பல சிறுகல்வெட்டுகளும் இவற்றில் அடங்கும். விசய நகர வேந்தர் காலத்தில் இக்கோயிலைத் திருப்பணி செய்தபோது அவற்றில் இருந்த பல பிற்காலப்பாண்டியர் கல்வெட்டுப் பொறித்த கற்கள் கோயில் சுவரிலும் தெப்பக்குளத்து மைய மண்டபத்திலும் வைத்துக் கட்டப்பட்டுள்ளன.

திருமோகூர் கோயில் பற்றிய முதல்குலோத்துங்கன் கல்வெட்டு கோயிலின் வெளிப்புறத்தில் கண்டறியப்பட்டது. இது இக்கோயிலை விண்ணகரம் என்று குறிப்பிடுகிறது (143/2003). கோயிலைத் திருப்பணி செய்வதற்காகச் செங்குடிநாட்டுச் சிறுகுன்றத்தூர், பாகனூர் கூற்றத்து வீரநாராயணச் சதுர்வேதிமங்கலம், வெண்பில்நாட்டு ஆலோடுபட்டான் குமாரபவித்திர சதுர்வேதி மங்கலம் முதலிய ஊர்கள் திருப்பணிப்புற இறையிலியாக அளிக்கப்பட்டுள்ளன (139/2003).

திருமோகூர் காளமேகப்பெருமாள் கோயிலில் தற்போது சக்கரத்தாழ்வார் வழிபாடு சிறப்புடன் நடைபெற்று வருகிறது. இவ்வழிபாடு இக்கோயிலில் கி.பி. 1259ல் தொடங்கிவிட்டது. இச்சக்கரத்தாழ்வாரைத் திருவாழியாழ்வார் என்று கல்வெட்டு குறிப்பிடுகிறது. திருமோகூர் கோயில் வளாகத்தில் கி.பி. 1259இல் முதலாம் சடையவர்மன் சுந்தரபாண்டியனின் அதிகாரி காளமேகமான காங்கேயன் என்பவன் திருவாழியாழ்வார் கோயிலைக் கட்டுவித்து நிலக்கொடையும் தந்துள்ளான். இவனே சேனாபதி ஆழ்வார்க்கும் (விஸ்வச்சேனர்) இங்கு சிற்றாலயம் எடுப்பித் துள்ளான் (141/2003).

திருமோகூர்க்கு அருகிலுள்ள யானைமலையின் வடகோடியில் பெருமாள் கோயில் ஒன்று உள்ளது. இக்கோயில் துங்கவனம் என்று அழைக்கப்படும் பகுதியில் இருக்கிறது. இங்குள்ள பிரம்மதீர்த்தக்கரையில் 'வேதநாயகர்க்கு கோயில்' ஒன்றினைச் சுந்தரபாண்டியக்கோனார் என்ற அதிகாரி அரசனது பெயரால் கி.பி. 1308-ல் எடுப்பித்தாகத் திருமோகூரிலுள்ள முதலாம் மாறவர்மன் குலசேகர பாண்டியன் கல்வெட்டு தெரிவிப்பது குறிப்பிடத்தக்கது (140/2003).

திருமோகூர் தெப்பக்குளம் பகுதியிலுள்ள துண்டுக் கல்வெட்டு ஒன்று பெருமாள் சடகோபன் பாட்டுக் கேட்டதைக் கூறுகிறது. திருமோகூர் பள்ளிகொண்ட பெருமாள் சன்னதிக்குப் பின்புறமுள்ள பிற்காலப் பாண்டியர் கல்வெட்டு மார்கழித் திங்களில் திருக்கல்யாண நிகழ்ச்சி நடைபெற்றதைக் கூறுகிறது (134/2003). தென்பறப்புநாடு என்ற நாட்டுப்பிரிவில் இருந்த திருமோகூர் காளமேகப் பெருமாள் கோயில் நிர்வாகத்தில் திரிதண்டி சன்னியாசிகளும், ஸ்ரீவைஷ்ணவர்களும் ஈடுபட்டுள்ளனர். இவர்களோடு ஜீயர் சௌமிதரதாசன் என்பவரும் குலசேகரபாண்டியன் காலத்தில் இக்கோயில் நிர்வாகத்தில் இருந்துள்ளார். இவர் இக்கோயில் திருமடைவளாகத்தினை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார் (137/2003).

கி.பி. பதினாறாம் நூற்றாண்டில் திருமோகூர் கோயில் கருவறை, அர்த்தமண்டபம், மகாமண்டபம் பகுதிகள் முற்றிலுமாகப் புதுப்பித்துக் கட்டப்பட்டுள்ளன. கி.பி. 1551-ஆம் ஆண்டினைச் சார்ந்த இரண்டு கல்வெட்டுகள் மகாமண்டபத் தென்சுவரில் பொறிக்கப்பட்டுள்ளன. இவற்றில் ஒரு கல்வெட்டு வசவண்ணநாயக்கர் காலத்து அரச ஆணையையும் மற்றொன்று காளமேகப்பெருமாளின் நித்திய நைவேத்தியங்களுக்காகக் களவேள்விநாட்டில் இருந்த மானகுழி என்ற ஊர் திருவிடையாட்டமாக அளிக்கப்பட்டதையும் கூறுகின்றன (132/2003). முன்பு களவழி என்று அழைக்கப்பட்ட நாடே விஜயநகரவேந்தர் காலத்தில் 'களவேள்வி நாடு' என்று மருவியுள்ளது.

கி.பி. 1700-ல் மதுரை நாயக்கரின் தளவாயாக விளங்கிய நரசப்பய்யனின் அனுமதியின் பேரில் வெங்கப்பய்யன் என்பவர் திருமோகூர் காளமேகப்பெருமாள் கோயில் வெளிச்சுற்றுத் திருமதிலை விரிவுபடுத்தியும் உயர்த்தியும் கட்டியதைக் கல்வெட்டு ஒன்று கூறுகிறது (142/2003).

யானைமலைக் கல்வெட்டுகள்

நரசிங்கப்பெருமாள் கோயிலைப் பிற்காலத்தில் திருப்பணி செய்தபோது அவற்றில் இருந்த கி.பி. 13, 14-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த கல்வெட்டுப் பொறித்த கற்களைப் பெயர்த்து உள்திருச்சுற்று மதிலிலும் வெளிச்சுற்று மதிலிலும் வைத்துக் கட்டியுள்ளனர். இக்காலத்தினைச் சார்ந்த பல செய்திகளை இக்கல்வெட்டுகள் தருகின்றன. துண்டுக்கல்வெட்டுகளாக உள்ள இக்கல்வெட்டுக்கள் அனைத்தும் படியெடுக்கப்பட்டு இத்தொகுதியில் முதன்முதலாகப் பதிப்பிக்கப் படுகின்றன. அவற்றில் ஸ்ரீவல்லபனின் (கி.பி. 1101-1129) கல்வெட்டு, வேலூர் குளக்கீழ் நாட்டில் உள்ள குந்தவைச் சதுர்வேதிமங்கலத்துச் சபையார் கூடி எடுத்த முடிவு ஒன்றினைக் கூறுகிறது (167/2003). முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியனின் சிறப்பும் சோழநாட்டு வெற்றியைக் கூறும் மெய்க்கீர்த்திப் பகுதிகளும் இத்துண்டுக் கல்வெட்டுகளில் இடம் பெற்றுள்ளன. இம்மன்னனது கல்வெட்டுகளில் நரசிங்கப்பெருமாளுக்குக் கொடுக்கப்பட்ட நிலங்கள் மற்றும் பாண்டிய அதிகாரிகள், நாடு, ஊர்ப் பெயர்கள் ஆகியவை உள்ளன. கோயிலில் நடைபெற்ற அன்றாட வழிபாடுகள், திங்கள், ஆண்டு உற்சவங்கள் பற்றிய செய்திகளையும் இவை தருகின்றன.

கி.பி. 14-ஆம் நூற்றாண்டில் மாலிக்காபூர் படையெடுப்பிற்குப் பிறகு மதுரையில் இருந்த பாண்டியர் ஆட்சி சீர்குலைந்தது. மதுரையில் கி.பி. 1323-க்குப் பிறகு மதுரை சுல்தானியர் ஆட்சி தொடங்கியது. மதுரையின் புறப்பகுதிகளில் இருந்து கொண்டு பாண்டியர்கள் ஆட்சி

செய்தனர். அவர்களில் முதலாம் சடையவர்மன் பராக்கிரம பாண்டியனின் (கி.பி. 1316-1334) கல்வெட்டுகள் திருவாதவூர், திருப்புவனம் கோயில்களில் ஏற்கனவே கண்டறியப்பட்டுள்ளன. யானைமலையிலும் இப்பாண்டியன் கல்வெட்டு ஒன்று உள்ளது. இவனோடு சமகாலத்தவனாக ஆட்சிபுரிந்த குலசேகரபாண்டியன் கல்வெட்டும் இக்கல்வெட்டுக்கு அருகிலேயே கண்டறியப் பட்டுள்ளது. யானைமலை நரசிங்கப்பெருமாளுக்குத் திருநெல்வேலி மாவட்டம் அம்பாசமுத்திரம் அருகிலுள்ள விக்கிரமசிங்கபுரம் என்ற வணிக நகரத்தின் பகுதியில் முத்துடையான் குளத்தினைத் திருவிடையாட்டமாக அளித்ததைப் பராக்கிரமபாண்டியன் கல்வெட்டுக் கூறுகிறது (163/2003). குலசேகரபாண்டியன் கல்வெட்டுத் தெய்வச்சிலையான் இளையாழ்வானான சுந்தரபாண்டிய காலிங்கராயன் என்பவன் புரவுவரிநல்லூரை நரசிங்கப்பெருமாளுக்குப் பூந்தோட்டம் செய்வதற்குத் தெய்வச்சிலையான் குழைகாதர் உள்ளிட்டார்க்குத் தானமாக அளித்ததைக் கூறுகிறது (164/2003). விசயநகரவேந்தரில் புகழ்பெற்ற விளங்கிய கிருஷ்ணதேவராயரின் வடமொழிக் கல்வெட்டு அவருக்கு வாசல்காரியம் செய்த திம்மபூபனையும் அவனது அலுவலர் மதுரநாதனையும் குறிப்பிடுகிறது (165/2003). இவர்கள் நரசிங்கப்பெருமாள்கோயில் மகாமண்டபத்தைக் கட்டியவர்களாக இருக்க வேண்டும்.

குன்னத்தூர்க் கல்வெட்டுகள்

குன்னத்தூர் குன்றில் தமிழ் - பிராமி கல்வெட்டு காணப்படும் குகைத்தளத்திற்கு மேலே மலையின் உச்சியில் பாழடைந்த நிலையில் சிவன்கோயில் ஒன்றின் அடிப்பகுதி மட்டும் எஞ்சி யுள்ளது. இதன் தென்புறம் கி.பி. 9, 10-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த வட்டெழுத்துக் கல்வெட்டு ஒன்று இருப்பது கண்டறியப்பட்டது (179/2003). குன்றத்தூர் குளக்கீழ்நாட்டுப் பிரமதேயத்தில் இருந்த மூலபலஈசுவரம் என்ற சிவன் கோயில் வழிபாட்டிற்காக அக்கோயிலில் அகநாழிகைப் பணி (பூசை) செய்வாரிடம் குன்றத்தூர் குளக்கீழ் நாட்டுக் காவனூர் அரையன் நக்கன் என்பவன் கொடையளித்துள்ளான்,

இக்கோயிலின் பின்புறம் மலையடிவாரத்தில் பிற்காலப் பாண்டியர் காலத்துக் கட்டடக் கோயில் ஒன்று உள்ளது. இவனுக்குரிய கல்வெட்டுகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. இக்கோயிலை நடுமலையிலுள்ள கோயில் என்று கல்வெட்டு குறிப்பிடுகிறது. குன்னத்தூர் ஊரின் உட்பகுதியில் காணப்படும் சிவன், பெருமாள் கோயில்களில் உள்ள துண்டுக் கல்வெட்டுகள் இத்தொகுதியில் இடம்பெற்றுள்ளன. இவை கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் பிற்காலப் பாண்டியர் காலத்தில் இக்கோயிலுக்கு அளிக்கப்பட்ட கொடைகள் பற்றிக் கூறுகின்றன.

குன்னத்தூர் குகைத்தளத்துப் படுக்கைப் பகுதியில் விசயநகரர் காலத்து இம்முடி நரசிங்கராயரின் (கி.பி. 1509) கல்வெட்டு ஒன்று உள்ளது (180/2003). விசயநகரவேந்தர் காலத்தில் மதுரைப் பகுதியில் சிறப்புடன் விளங்கிய வீரபத்திரர் வழிபாடு பற்றி அறிய இது துணைபுரிகிறது. மலைக்குடி, புளியங்குளம் முதலிய ஊர்கள் குன்னத்தூர் வீரபத்திரநாயனார் கோயிலுக்குத் தானமாக அளிக்கப்பட்டதை இக்கல்வெட்டு தெரிவிக்கிறது. குன்னத்தூர் ஊர்ப் பகுதியில் கி.பி 15-ஆம் நூற்றாண்டில் விசயநகர வேந்தர்க்குக் கட்டுப்பட்டு ஆட்சி புரிந்த சுந்தரத்தோள்மாவலி வாணாதிராயர் கல்வெட்டு ஒன்று உள்ளது. குன்றத்தூரிலுள்ள கி.பி. 17-ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டு ஒன்று ஊரார் ஒன்று சேர்ந்து குளம் ஒன்றினைப் பராமரிக்க எடுத்த நடவடிக்கை குறித்து கூறுகிறது (193/2003).

INTRODUCTION

The main aim of the State Department of Archaeology is copying all the stone inscriptions in Tamilnadu, deciphering and publishing them as early as possible. A number of volumes have been so far published by this department. Now, an intensive campaign of copying the inscriptions has been launched since September 2004 and consequently new volumes are coming up. In this scheme, inscriptions of Madurai District are copied and are to be published in two volumes. This volume is one among such series.

In this volume inscriptions of the villages of Melur Taluk and Madurai North Taluk are incorporatad. Melur Taluk villages like Thiruvathavur, Kaccirayanpatti, Kallangadu. Aruvimalai, Dhargakudi, Karungalakudi, Chockalingapuram, Panaiyur, Maruthur, Amur, Kottakkudi, Panankadi, Kuththappanpatti, Kottainathampatti Keelavalvu, Melavalavu, Arittapatti and Poykaikkaraipatti are explored and inscriptions are deciphered and included here. Inscriptions of Thirumohur, Yanaimalai, Kunnathur, Senkottai, Sakkudi and Puliyankulam villages in Madurai North Taluk are also incorporated here. All these inscriptions serve as main source materials in the reconstruction of the history of this part of Pandya country. Brief discussion about these inscriptions are given below which will help the readers to understand the general content.

Thiruvathavur Inscriptions

Thiruvathavur village is a famous religious centre since early Sangam age. Two Tamil - Brahmi inscriptions are noticed datable to 200 B.C. in a natural Jain Cavern. It is stated as the birth place of Sangam poet Kapilar and Manickkavasaka, the author of Thiruvasakam.

In this village, inscriptions are copied from the walls of Thirumarainatha Swami temple, village irrigation tank and stones planted in the middle of the village. These records belong to a long span of time from 12th century A.D. up to the modern period. Thiruvathavur formed part of Thenparappu Nadu in medieval days. The earliest inscription found in this temple belongs to Veerapandya (1170-1195 A.D.) which begins with the prasasti 'Pumaruviya Thirumadhum', the king who was defeated in the battle of Nettur with Kulothunga Chola-III.

Records of the later Pandyan Kings viz. Maravarman Sundarapandya I and II, Jatavarman Kulasekhara, Maravarman Vikramapandya and Maravarman Kulasekhara I

are found in the temple walls of Thirumarainatha Nayanar. Inscriptions of Jata varman Parakramapandya, who ruled in this region during the Madurai Sultanate period are worthy of mention. These records picturise the social conditions of this area during the later Pandyan Rule.

The land holders of Vellan Vagai lands and the Nattars were engaged in hectic activities in this area. Brahmin Sabhas of this region had good co-operation with the neighbouriong Urars. Temples emerged as well developed fudal establishments and consequently most of the Vellan vagai villages were converted into Nallurs without any change in their character. This shows the growing importance and influence of the temples (temple villages). The following tax free devadana villages, Vedhanayaka Nallur, Valangai Mikama Nallur, Pallikuricci alias Sonadu Konda Perumal Nallur, Thirumarai Nayaka Nallur, Velankudi alias Devarkal Deva Nallur, Senkulam alias Narppaththennayira Nallur, Kamar mangalam alias Sri Maheswara Nallur, and Mandaliga Gembira Nallur are known from the inscriptions of Thiruvathavur.

Two villages viz. Iluppaikudi and Pallikkurichi were administered by warrior groups named as 'Padaikkaranavar'. Whenever the war drums were beaten these warriors readily marched into battle. A number of taxes were levied on the lands during later Pandya period according to the quality of land and kind of crops. Kadamai, Antharayan, Ponvari, Kovil viniyokam, Ur viniyokam, Tharavukuli, Karthigai Pachchai, Pillaiyar Nonbu, Thanda Korrilakkai, Kadaikuttu Ilakkai, Anai Salai, Kuthiraippanthi, Santhivikraham, Panchupeeli were some of taxes levied during that time

Measuring units like Sundara Pandyan Kol (measuring 24 feet), Kalakanda devan, Vira Pandyan are known from the inscriptions. Acchu, Palam Pon (old gold) Irasipanam, Ainju Meni Drama were some of coins in vogue.

Cheiftains who hailed from particulār families governed these areas as the royal representatives or officials. They bore the tile of Nadalvan Thenkalavalinadu, a territorial sub division comprising Thiruvathavur and its surroūndings. They acted according to the direction of the Kings, collected taxes, exempted taxes for certain lands and served as a bridge between Urs and the Kings. One Jeyamkonda Chola Srivallabha alias Kalāvali Nadalvan is mentioned in the inscriptions of Jatavarman Kulasekara Pandya.

Almost all the inscriptions of this temple are donatory in content. From these records the relationship between the land, temple and the various social groups are known. Number of special Santhi worships had been instituted in

Valankai Mikaman Santhi are few among them. Names of 63 Saivaite Nayanmars (Saints) are engraved in a single row of inscriptions.

One Saiva Mutt was established at Thiruvathavur during Maravarman Sundara Pandya I period. One Parakramadevar was the Pontiff of this mutt and for the maintenance of this Ambalathadinallur village was donated as tax free grant.

The irrigation tank of Thiruvathavur is mentioned in some inscriptions The names of the individuals who constructed the sluice are also mentioned.

Inscription on an oil pressure

Oil mongers had engaged in oil extraction by stone pressures. Some oil pressures are noticed with inscriptions in some villages. In Melur Taluk also one such inscribed oil pressure has been noticed by our department at Kachirayanpatti village. An individual Appanuzhan by name hailed from Mizhalur in Vazhuthi Valanadu had installed this stone oil pressure in the name of Porkodi Virar (a warring group) of Nelvelur in Suranadu.

Aruvimalai inscript ions

Aruvimalai, a small hillock located near Karungalakudi, is famous for a Pandya period temple. Inscriptions of Maravarman Kulasekhara are noticed on the temple walls and near by rock surface. The temple is named as Thirumelakiya Pandya Nayanar and Thirumelazhi Nayanar in the inscriptions. The hill is named Aruvimalai after the name of a village Aruvikkudi.

Inscriptions of this temple reveal the land donations by the Kammala community during 13th Century A.D. and thier association with the temple. The names of the Thattans (smiths) are known from these inscriptions and some of them had associated with the royal household.

Dhargakudi Inscriptions

One later Pandya temple found in the village Dhargakudi has some Pandya inscriptions and one Vijayakara ruler Sathasivaraya's inseription. Thirukkotisvaramudaiyar temple is mentioned in these inscriptions. Activities of the Nattars and Urars, their role in the day to day functions of the temple and festivals are known from these inscriptions. Irrigation tanks, minor channels and their maintenance are all described in the inscriptions. One group Kadakamarukkikal, a security force of traders is mentioned in a slab stone inscription planted near by the temple. Nagarathars of Aruviyur had installed Goddess Thirukkamakottamudaiya Thirumamadanthai Nacciyar image at this temple.

Karungalakudi

A Tamil - Brahmi inscription datable to 2nd Century B.C. is found here on a natural cavern where Jain manks resided. One ninth century A.D. inscription engraved below a Mahavira bas-relief sculpture mentions that Accanandhi caused to carve that figure. Another inscription in Vatteluthu script refers to Pallitharaiyar who served as royal officials during the early Pandya period (9-10 Century A.D.).

Vayalipparai, another rocky place contains many Tamil inscriptions. Construction of sluice during 13th Century A.D, its repairs during 18 Century A.D. by one Muslim donor are known by inscriptions. Raising of a mango grove with a well during 18th Century A.D. is mentioned in an inscription. Inscriptions of Lingama Nayak period are also noticed in near by area called Uppuchunaiparai.

Chokkalingapurum Inscriptions

A later Pandya temple Alagiya Cholisvaram udaiyar built by Maravarman Kulasekhara I is found here. Donation of tax free lands, details of the tax defaulters, lands attached with the temple and establishment of a flower garden are mentioned in the inscriptions engraved on the walls of the temple.

Maruthur

One 13th Century A.D. later Pandyan Vishnu temple is located in dilapidated conditon. Rajendra Chola Châturvedimangalam and its association with the temple is known from the inscriptions here.

Amur

Amur is situated on the way to Thiruvathavur from Madurai. The merchant guild Thisai Ayirathu Aynurruvar had constructed a Siva temple during 13th Century A.D. and named it as Ayyappozhil Isvaram. An official Sembiyan Pallavaraiyan had installed a bronze idol for Palliyarai Nacciyar and instituted a perpetual lamp for it during Jatavarman Kulasekhara's days. Construction of a sluice is mentioned in a Vatteluthu record which is in a verse from.

Panankadi

One Siva temple and Vishnu temple are found in this village. They were constructed by later Cholas and renovated by later Pandyas. It was a brahmadeya village and named as Rajendra Chola Chaturvedimangalam. Once this place was occupied by the Cholas, hence the names of the different quarters of this village

are named as Vanavanmadevicheri, Sundara Cholacheri, Rajendra Cholacheri and so on Vishnu temple is named as Vırriruntha Perumal temple from which inscriptions of Jatavarman Kulasekhara I and Marvarman Sundara Pandya I are copied now. An interesting inscription records about the establishment of Chakkarathalvar shrine at Alagarkoil Temple administration, land disputes and the role playedby Kalavali Nadalvar in this region are traced out from the inscriptions found here.

Kaththapatti inscription datable to 17th Century A.D. tells about the donation of a well by one Marudhan Thondaiman.

Keelavalavu, a Jain centre is famous for its Brahmi inscription. Here some inscribed grinders are found on which lables like Katti, Kalam Aratti are traced

Two inscriptions revealing the fomation, structure and management of the tank Parambukkanmai are included in this volume. Inscription of Marvarman Sundara I mentions the village name as Parambu alias Thirunarayanamangalam Arrangements were made for the maintenance and proper water management during Vijayanagar period.

Arittapatti

Arittapatti is a famous Jain centre in which recently one more Tamil Brahmi inscription was noticed by the epigraphists of this department. Another Vatteluthu inscription which mentions about the Accanandhi's works, dated to 9-10 Century A.D. is also included here. One ruined later Pandyan Siva temple was located recently and the inscriptions are copied which reveal a mercantile settlement existed here during 14th Century A D. The original name of present Arittapatti is known as Pathirikudi from these inscriptions.

Poykaikarapatti

An important inscription of Rathakaras (Kammalas) which gives the Prasasti of that community is found here. One mercantile centre Pavithiramanikkapuram is also known by an inscription. The association of this village with Alagargoil has come into light from the inscriptions noticed here.

Thirumohur

The texts of the inscriptions found on the walls of Thirumohur Kalamegapperumal temple are published for the first time in this volume. Inscriptions of Kulothunga Chola I (1170-1120 AD), Jatavarman Sundara pandya I (1251-1271 A.D.) and Maravarman Kulasekhara are to be mentioned significantly. Moreover two inscriptions of Vijayanagara rulers (1551 A.D.) are also worthy to mention. Generally the regnal years of the rulers will be mentioned in the

Pandya inscriptions. Quite differently an in inscription a date of Karif year has been mentioned. This year corresponds with the eighth regnal year of Jatavarman Sundara Pandya. From this we can surmise that the numbering of the regnal year was also based on the cultivation seasons.

Some inscriptions of this temple reveal the names of the temple builders and the donors of various donations given to this temple. When the renovation was carried out in Vijayanagar period, some of the stones, bearing later Pandya inscriptions were dislocated and misplaced in temple walls and the central mantapa of the temple tank. These multilated inscriptions also reveal various donations to this temple. The names of Pandyan officials and the village names included in various nadu sub divisions are known from these inscriptious.

The earliest inscription of this temple which belongs to Kulothunga Chola I was discovered at the outerside of the temple. This inscription mentions the name of this temple as Vinnagaram (Vishnu temple). Large extent of lands were donated during 13-14th Century A.D. for this temple. Villages like, Sirukunrathur in Senkudinadu, Viranarayana Chaturvedi mangalam in Pakanur Kurram, Alodupattan Kumara Paviththira Chrturvedimangelam were donated for the renovation of this Thirumohur temple.

Worship of Chakkarathalvar is well flourished and adopted till today in this temple. This cult was initiated during 1259 A.D. here and it is mentioned as 'Thiru-vali Alwar' in inscriptions. During 1259 A.D. an official of the King Jatavarman Sundara Pandya, Kalamegan alias Kangeyan constructed this Chakkarathalvar shrine and donated some lands. Another small shrine to Senapathi (Visvaksenar) was also established here by the same official.

At the northern end of the Yanamalai hill lies a forest named as Thungavanam in whieh a Vishnu temple constructed is noticed. An inscription dated 1308 A.D. of Maravarman Kulasekhara I period, reveals that a temple was constructed on the banks of Brahmathirtham by an official Sundara Pandya Konar. That temple was named as Vedanayakar (Brahma) temple.

A fragmentary inscription found in the temple tank mentions that Lord Vishnu had listened the hymns of Sadagopan. (Nammalwar). One later Pandya inscription found on therear side to the Pallikondaperumal shrine mentions about the divine marriage (celestial wedding) between Andal and the Lord Ranganatha to that was celebrated in the month of Margali (December - January). This Kalamegapperuma temple was administered by Thiridhandi Sanyasis and Sri Vaishnavas. One Jeeyar Sowmitharadasa also is noticed as an between Audal and the Land Ranganet aministrator during Kulasekhara Pandya period. He had taken steps to construct the Thirumadaivilagam.

The whole temple including Sanctum sanctorum, Ardhamantapa and Mahamantapa were fully renovated during the 16th Century A.D. On the southern walls of mahamandapa two important inscriptions dated to 1551 AD have been engraved. Among these two, one is the royal order of Chief Vasavanna Nayaka and another one is the order of Lord Kalamega Himself. These inscriptions state about the donation of the Ur Manakuli situated in Kalavelvinadu. Kalavalinadu has been corruptedly mentioned here as Kalavelvinadu.

The outer prakara wall of Kalamegapperumal temple was constructed by a chief Venkappayya with the permission of the Dalvay Narasappayya of Madurai Nayak ruler during 1700 AD. Such important events engraved in the inscriptions are included in this volume.

Yanaimalai

One Tamil - Brahmi inscription dated to 1st Century A D. engraved on a natural cavern in Yanamalai hill has been already published by the epigraphy branch of Archaeological Survey of India. Some Vatteluthu inscriptions dated to 9-10 century AD are also published by the same agency. In the recent field survey the state department of Archaeology has noticed some more new inscriptions at Narasingapperumal temple walls which are included in this volume.

During the later renovation work of Narasingapperumal temple, a number of stones bearing 13-14th Century A.D. inscriptions were misplaced. They are now located on the walls of the first and outer prakaras and are copied and published in this volume. All the fragmentary inscriptions are studied and included here. Among them,inscriptions of Sri Vallaba (1101-1129 A.D), Maravarman Sundara Pandya I and some other later Pandyas are worthy to be mentioned.

Sri Vallaba's inscription reveals a decision taken by the Sabha of Kundavai Chaturvedimangalam. Some fragmentary inscriptions elobarate the victories of Maravarman Sundara I in his prasasti portions. Some inscriptions describe the donated lands their boundaries, official donors, the names of Nadus, Urs and so on. Details of daily worship, monthly and annual festivals conducted are also mentioned in some inscriptions.

Malikafur's invasion during the beginning of 14 CenturyA.D resulted in the end of Pandya rule in Madurai proper. Since 1323 A.D. Madurai was ruled by Sultans of Madura. Pandyas were driven away to the pheripheral regions. Some inscriptions of Jatavarman Parakrama Pandya (1316-1334 A D.) were so far discovered at Thiruvadavur and Thiruppuvanam temples. In the recent survey his inscriptions are noticed in Yanamalai temple also. On the southern adhistana of the Mahamantapa

of Narasingapperumal temple this inscription and another one of Kulasekara Pandya are noticed now. These two Pandya inscriptions found very near to Madurai during Sultanate rule are very important in constructing the later Pandyan history.

Another one inscription of Parakrama Pandya reveals the donation of a tank named Muthudaiyankulam, situated at a merchantile nagara at Vikkiramasingapuram near Ambasamudram in Thirunelveli District as a Thiruvidaiyattam donation to Yanamalai Narasingapperumal temple. This donor is namedas Marakkalankaththan who was the son-in-law of Makkanayan. Kulasekara's inscription states that one Deyvachilaiyan alias Ilaiyalvar Sundara Pandya Kalingaraya has donated the village Puravu Varinallur for a flower garden.

Vijayanagar's greatruler Krishnadevaraya's inscriptions also are found engraved in this temple. Two officials. Timma Poopan and Madhuranathan are mentioned in this inscription. They might have constructed the Mahamantapa of Narasingapperumal temple.

Kunnaththur

Inscriptions found in the temples on Kunnathur Hill and in the middle of the village are included in this volume. These records belong to early Pandya, later Pandya, Vijayanagar Kings and Vanathiraya cheifs period.

On the terrace of Kunnaththur hill, a basement of a dilapidated Siva temple is found. One Vatteluthu inscription datable to 9-10th century AD is noticed now on the southern side of the dilapidated temple. This record states that some donation was made for the daily offering of a temple. Mulabala Isvaram, situated at Kunraththur, is a brahmadeya village in Kunraththur Kulakkilnadu. This endowment was handed over to Akanaligayar (temple preists) by the donor Araiyan Nakkan of Kavanur. This Siva temple is now identified on the top of Kunraththur. hill.

At the back side of this Siva temple, on the slope of the hill another structural temple datable to later Pandya period dedicated to Siva is now noticed. So far unnoticed inscriptions found on the walls of this temple are incorporated in this volume. The records engraved. on the walls of Neelakantesvara cave temple are also helpful to know the history of this temple. Most of the records belong to Sadaiyavarman Kulasekara I and Maravarman Sundara Pandya period which reveal various donations given to this temple.

Some fragmentary records found on the walls of Siva and Vishnu temple built at the centre of the village are also included in this volume, most of which are

donatary in content. On the stone bed of a Jain cave at Kunnathur, an inscription of Vijāyanagar ruler Immadi Narasingaraya (1509 A.D.) has been noticed. By this record the flourishing Virabhathra cult of worship during Vijayanagar period comes to light. Two villages viz. Malaikkudi and Puliyankulam were donated for this Virabhathra temple. Inscription of a Bana chief Sundarāththoludaiya Mavali Vanathiraya is also noticed in this village. One 17th Century A.D. inscription mentions about the maintenance of a water tank by the Kunnaththur Urar.

Inscription copied at village Senkottai reveals the existence of a Vishnu temple during 13 century A.D. Puliyankulam record tells about the establishhment of 'Appan Thiruvenkatanathan Matha' a Vaisnava mutt, during 1449 A.D. by one Mavalivanathiraya. Kumankulam and Puliyankulam villages were donated as Madapuram for this Vaishnava mutt.

This volume consists of important source materials whieh are essential for the reconstruction of Tamilnadu History. These inscriptions were copied and decipherd by the able guidence of Mr P. Rajendran, Dr V. Vedachalam, Epigraphists and Mr. R. Jeyaraman, Junior Epigraphist. Dr. C. Santhalingam, Archaeological Officer. Madurai has associated in editing the inscriptions and preparing introducing notes. Our Epigraphical attenders Mr. Mathivanan, Mr. Murugesan, Mr. Jothi, Mr. Anbalagan and Mr. Muthusamy have done their job neatly in copying these records. It is sure that this volume will be received well by the research world and by enthusiasts of epigraphy alike.

SUMMARY OF INSCRIPTIONS

MADURAI DISTRICT - Vol. I

Thiruvāthavūr

1/2003 Later Pāṇḍya - 13-14c. A.D.

The name of the temple is given as Thiruvāthavūruḍaiyār Thirumaṟaināyanār Kōyil. In this temple the image of Subramanya was installed by one Seyyaperumāḷ Āraṇaṉ Thoḷaniṉṟān alias Rājakaṇḍagōpālar Seyyaperumāḷ. Land measuring about four Mā and Kāṇi was donated at Kaḷakuḷam located in Karuṅkuḷam in Kaḷavaḻināḍu for food offerings.

2/2003 Later Pāṇḍya - 13-14c. A.D.

The details of the previous inscription is stated in this record in the form of a royal order.

3/2003 Parākkirama Pāṇḍya - 14c. A.D.

Records gift of land for the maintenance of a flower garden and for the supply of certain quantity of flowers to the temple. This inscription is in the words of the God Himself and the Sanskrit portion in the beginning states that this is a record of Vādhapurīśvara.

4/2003 Parākkirama Pāṇḍya - 1322 A.D.

4. வரி விநியோகம் வாசல் பேறு வெட்டிப்பாட்டம் பஞ்சுபீலி சந்திவிக்கிரகப் பேறு காரியவாராய்ச்சி தறியிறை செக்கிறை தட்டொலி தட்டார் பாட்டம் இடைவரி ஏரிவரி இனவரி ஏரி மீன்பா

5. ட்டம் மற்றும் எப்பேற்பட்ட உபாதிகளும் தவிர்ந்து இன்னாள் முதல் நம் வரியிலார் கணக்கிலும் கழிப்பதாகச் சொன்னோம் இப்படிக்கு இவ்வோலை பிடிபாடாகக் கொண்டு இவ்வூர்

6. நான் கெல்லையிலுந் திருவாழிக் கல்லு நாட்டிக் கொண்டு சந்திராதித்திவற் செல்வதாக கல்லிலுஞ் செம்பிலும் வெட்டிக் கொண்டு திருப்பணி செய்து போதுக இவை நெட்டூருடையான் னெழுத்து

7. யாண்டு அ நாள் உாஅலஎ இவ்வ சுந்தரபாண்டிய . . . சாரிய னெழுத்து உ

மாவட்டம் :	மதுரை	ஆட்சி ஆண்டு :	40
வட்டம் :	மதுரை வடக்கு	வரலாற்று ஆண்டு :	கி.பி. 1308
ஊர் :	திருமோகூர்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	333/1918
மொழி :	தமிழ்		
எழுத்து :	தமிழ்	முன் பதிப்பு :	—
அரசு :	பிற்காலப் பாண்டியர்	ஊர்க் கல்வெட்டு எண்	9
மன்னன் :	முதலாம் மாறவர்மன் குலசேகரன்		

இடம் : காளமேகப் பெருமாள் திருக்கோயில், தெற்கு வெளிப்புற திருமதிலின் உட்புறம்.

குறிப்புரை : துங்கவனத்தில் பிரம்மதீர்த்தக்கரையில் அரசன் பெயரால் சுந்தர பாண்டிய சோழக் கோனார் என்பவர் எடுப்பித்த வேதநாயகர் கோயிலுக்குத் தென்பறப்பு நாட்டுப் பன்னாட்டான் கோட்டை என்ற ஊர் காராண்மை திருவிடையாட்ட இறையிலி யாக அளிக்கப்பட்டதை இக்கல்வெட்டுக் கூறுகிறது. இக்கோயில் யானை மலையின் தென்கோடியில் உள்ளது. இங்குள்ள பாறையில் பிற்காலப் பாண்டியர் கல்வெட்டு ஒன்றும் காணப்படுகின்றது.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ கோச்சடை வன்மரான த்ரிபுவந சக்ரவத்திகள் ஸ்ரீசுந்தரபாண்டிய தேவர்க்கு யாண்டு எட்டாவது நாள் உாஅயெ னால்
2. தாஞூழ் ஸ்ரீமற்கீர்த்திக்கு மேல் ஸ்வஸ்திஸ்ரீ த்ரிபுவந சக்கரவத்தி கோநேரின்மை கொண்டான் தென்பறப்பு நாட்டுத் திருமோகூர் நின்றருளிய பரமஸ்வாமிகள் கோயில் திருப்பதி
3. வயிஷ்ணவர்களுக்கும் ஸ்ரீதண்டி ஸந்யாஸிகளில் இராமானுஜ ஜீயற்கும் தங்களூர் ஸ்ரீதுங்கவனத்தில் ப்ரஹ்ம தீர்த்தக்கரையில் முன்னாள் இறங்கிக் கிடந்து நம்பேரால் சுந்தரபாண்டிய

4. ச் சோழ கோனார் எழுந்தருளிவித்த நாயனார் வேதநாதற்கு அமுது படி சாத்துப்படி உள்ளிட்ட நித்த[நிமந்தங்]களுக்கும் திருநந்தவனம் செய்கிற ஸ்ரீவயிஷ்ணவர்களுக்குக் கொற்றிலக்கைக்

5. குமாக இந்நாட்டுப் பன்னாட்டான் கோட்டையும் . . . . . முக்குளம் இந்நாயனார் திருநாமத்தாலே இவ்வூரவர் பக்கலிலே கொண்ட குளத்துக்கு நான்கெல்லைக்கு உட்பட்ட நீர் நிலமுங்

6. கருஞ்செய் புன்செயும் நத்தமும் நத்தபாளும் தோட்டமும் தோட்டக் கூறுங் குளமும் குளப்பரப்பும் மேனோக்கின மரங்களுங் கீழ்நோக்கின கிணறுகளும் மற்றும் இத்தால் வ

7. ந்த ஸஊஹூஸ்திகளும் உட்படக் காராண்மைத் திருவுடையாட்ட இறை யிலியாக குடுத்து இவ்வூருக்கு வருங்கடமை வினியோகம் பொன்வரி அந்தராயம் காரியவாராய்ச்சி வெட்டிப்பாட்டம் பஞ்

8. சு பீலி சந்து விக்ரஹப்பேறு வாசல்பேறு இலாஞ்சினைப் பேறு தறியிறை செக்கிறை தட்டொலி தட்டார்ப்பாட்டம் இடைவரி இனவரி ஏரிமீன் பாட்டம் மற்று இத்தால் வந்த ஸ

9. ஊஹூப்திகளும் உட்பட இந்நாயனார்க்கு முதலடங்கக் காராண்மை திருவுடையாட்ட இறையிலியாக குடுத்து நம் வரியிலார் கணக்கிலும் கழிப்பதாகச் சொன்னோம் இப்படிக்கு

10. இவ்வோலை பிடிபாடாகக் கொண்டு சந்திராதித்தவற் செல்வதாக கல்லிலும் செம்பிலும் வெட்டிக் கொண்டு இவ்வூர் நான்கெல்லையிலும் திரிவாழிக்கல்லும் நாட்டிக்

11. கொள்ளவும் பாற்க வ ஸ்ரீமற்கீத்திக்குமேல் கோமாற பன்மரான த்ரிபுவனச்சக்ரவத்திகள் எம்மண்டலமும் கொண்டருளிய ஸ்ரீ குலசேகர தேவற்கு யாண்டு ச[௰]வது நாள் ௱௩௰௧

12. இவை ஒருடையான் எழுத்து இவை வாணாதிராயனெழுத்து

மாவட்டம் :	மதுரை	ஆட்சி ஆண்டு :	7+1
வட்டம் :	மதுரை வடக்கு	வரலாற்று ஆண்டு :	கி.பி. 1259
ஊர் :	திருமோகூர்		
மொழி :	தமிழ்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	330/1918
எழுத்து :	தமிழ்		
அரசு :	பிற்காலப் பாண்டியர்	முன் பதிப்பு :	—
மன்னன் :	சடையவர்மன் சுந்தரபாண்டியன்	ஊர்க் கல்வெட்டு எண்	10

இடம் : காளமேகப்பெருமாள் திருக்கோயில், தெற்கு வெளிப்புறத் திருமதில் உட்பக்கம்.

குறிப்புரை : காளமேகப்பெருமாள் கோயிலில் காளமேகமான காங்கேயர் என்பவர் திருவாழி ஆழ்வாரை (சக்கரத்தாழ்வார்) எழுத்தருளுவித்து நிலக்கொடை அளித்ததை இக் கல்வெட்டுக் கூறுகிறது. இந்நிலத்தின் எல்லைகள் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. இக்கல்வெட்டில் கூறப்படும் சக்கரத்தாழ்வார் சந்நிதி குறிப்பிடத்தக்க ஒன்றாகும். தற்போதும் இக்கோயிலில் இவ்வழிபாடு சிறப்பாக நடைபெறுகிறது.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ திருவாய்க்கேள்விக்கு மேல் ஸ்ரீகோச்சடைய பன்மரான த்ரிபுவநச்சக்கரவத்திகள் ஸ்ரீஸுந்தர பாண்டியதேவற்கு யாண்டு எ வதி

2. ன் எதிராமாண்டு வைகாசி மாதம் இருபத்தொன்றாந்தியதி தென் பறப்பு நாட்டு திருமோகூர் நின்றருளிய பரஸ்வாமிகளுக்கு . . .

3. க்காளமேகமான காங்கேயன் எழுந்தருளிவித்த ஆழ்வார் திருவாழி ஆழ்வார் சேனாபதி ஆழ்வார் திருப்பா .. க்கு . . .

4. க் காரணவர்க்குச் சமைந்த ஊரோமும் மத்தத்து[ம்] படையும் படைக் காரணவர்க்குச் சமைந்த ஊரோமும் பிரமாணம் பண்ணிக்குடுத்த பரிசாவது

5. இந்நாட்டு உடையார் திரு . . . . டையார் தேவதானம் போர்க் கா[ஓ]ட்டி திருவிராசிஷ்ர முடையானான வேணாவுடையார்க்கும் தா . . . .

6. ப்பிடி விழுந்தானுக்கும் . . . . த்தல் குளத்துக்கும் பள்ளன்குளத்துக்கும் சூழெல்லைக்குக் கீழெல்லை சிற்றானகரத்துக்கு மேற்கும் தென் னெல்லை . . . .

7. நீர் நக்கிக்கும் அரை . . . . லைக்கு வடக்கு மேலெல்லை பிடாரி யேம்பல் எல்லைக்குக் கிழக்கும் வடவெல்லை ஊத்தைப் பா[ட்டத்]துக்கு தெற்கு

8. ஆக இசைந்த பெருநான்கெல்லைக் குள்பட்ட குளமும் குளப்பரிப்பும் காலுங் கால்வ . . . மும் ஊர் நத்தமும் நத்தப் பாழும் களரும் நன்செய் புன்செயும் மேனோக்கின மரமும் கீணோ

9. க்கின கிணறும் புற்றும் தெற்றியும் உடும்போடியும் ஆமை தவழியும் மீன்படு பள்ளமும் தேன்படு பொதும்பும் சுடுகாடும் தோட்டமும் மற்றும் எப்பேற்பட்ட ஸஉ

10. ஸ்வாஷிகளும் இவர்கள் இவர்க்கு விற்றுக் குடுத்த இவர்களுக்கு இறை யிறுத்துப் போந்த வரிக் கணக்கு இத்தால் வந்த இறை எப்பேர்ப் பட்ட . . . .

11. வித்து ஊரிலும் வரியிலும் கழித்து இவ்வேணாவுடையார்க்கு காணியும் இந்நாயனார்க்கு குடியுமாக இற்றைநாள் கணக்கிலும் . . . . . கல்லியும் நாட்டி . . . . இ(வ்)

12. வர்க்கும் இவர் வற்க்கத்தார்க்கும் சந்திராதித்தவற் செல்வதாக ஸ்ராணம் பிடிபாடாக கல்லிலும் செம்பிலும் வெட்டிவித்துக் குடுத்தோம் திருவாழி ஆழ்வார்க்கு . . . . . .

13. க்கும் படையும் படைக் காரணவர்க்கும் சமைந்த ஊரோமும் மத்தத்து . . . . . . டைகாரணவர்க்குச் சமைந்த ஊரோமும் ஆழ்வார் திருவாழி ஆழ்வார்க்கும் ஸ்ரீசேனாபதி ஆழ்வார்க்கு . . . .

14. இப்படிக்கு நரலோக விழுப்பரையன் தற்குறிக்கும் மதிதுங்க் முத்தரையன் . . . . ய்யக் கொண்ட பேரரையன் தற்குறிக்கும் சிராம . . . . . .

15. தற்குறிக்கும் குலசேகர கங்கன் தற்குறிக்கும் நாட்டி . . . . தற்குறிக்கும் தற்குறி மாட்டெறிந்தேன் திருக்கண்ணபுரத்து திருவையோத்தி யுடையான்

16. இப்படிக்கு னாட்டி நாயகப் பேரரையன் தற்குறிக்கும் கண்ணுடைப் பேரையன் தற்குறிக்கும் வெள்ளிமலை நாடாழ்வான் தற்குறிக்கும் . . . . .

மாவட்டம் :	மதுரை	ஆட்சி ஆண்டு :	(சகம் 1622)
வட்டம் :	மதுரை வடக்கு	வரலாற்று ஆண்டு :	கி.பி. 1700
ஊர் :	திருமோகூர்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	—
மொழி :	தமிழ்	முன் பதிப்பு :	—
எழுத்து :	தமிழ்		
அரசு :	மதுரை நாயக்கர்	ஊர்க் கல்வெட்டு எண்	11
மன்னன் :	—		

இடம் : காளமேகப்பெருமாள் திருக்கோயில், வெளித் திருசுற்று மதில், தென்கிழக்கு, தென்மேற்கு, வடக்குப்புறப் பகுதிகள்.

குறிப்புரை : தளவாய் நரசப்பையனின் அனுமதியுடன் அவரது மகன் வெங்கப்பய்யன் வெளித் திருச்சுற்று மதிலை பிறமாதி, வெகுதான்ய மற்றும் விக்கிரம வருடங்களில் (கி.பி. 1698, 1699, 1700) கட்டினார் என்று இக்கல்வெட்டுகள் கூறுகின்றன.

அ 1. [சகாத்த]ம் ௲௬௱ ௨௰௨ ன் மேல் விக்கிரம ௵
2. [த]ளவாய் நரசப்பய்யன் அவர்கள் அனுமதியினாலே
3. நரசப்பய்யன் குமாரர் வெங்கப்பய்யனவர்கள்
4. கட்டிவித்த திருப்பணி பழனியப்பன் சதாசேவை

ஆ 1. வெகுதானிய ௵
2. வெங்கப்பய்யனவர்
3. கள் கட்டிவிச்ச மூலை

இ 1. சகாத்தம் ௲௬௱ ௨௰௧ ன் மேல்
2, பிறமாதி ௵ வெங்கப்பய்யன
3. வர்கள் கட்டிவிச்ச மூலை

மாவட்டம் :	மதுரை	ஆட்சி ஆண்டு :	—
வட்டம் :	மதுரை வடக்கு	வரலாற்று ஆண்டு :	கி.பி. 12-13-ஆம் நூற்றாண்டு
ஊர் :	திருமோகூர்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	—
மொழி :	தமிழ்		
எழுத்து :	தமிழ்	முன் பதிப்பு :	—
அரசு :	பிற்காலப் பாண்டியர்	ஊர்க் கல்வெட்டு எண்	12
மன்னன் :	—		

இடம் : காளமேகப் பெருமாள் திருக்கோயில், தெப்பக்குளம், மைய மண்டபம்.

குறிப்புரை : இத்துண்டுக் கல்வெட்டுகள் கோயிலுக்கு விடப்பட்ட நிலங்கள் பற்றியும் அவற்றை இறையிறுக்கும் கோலால் அளந்ததையும் நிலம் விற்றுக் கொடுத்ததைப் பற்றியும் தெரிவிக்கின்றன. ஒரு துண்டுக் கல்வெட்டு முதலாம் குலோத்துங்க சோழனின் மெய்கீர்த்திப் பகுதியுடன் உள்ளது.

கல்வெட்டு :

அ. 1. டலில்லா . . .
2. டுஆற்றூர் ந [பட] . . .
3. விற்றுக் குடு
4. கெல்லை ெ ..
5. கீனோக்கிய ....

ஆ. 1. னாமத்தாற் செய்வித்த ஸ்ரீகுலசேகர . . . ன் . .
2. றையிறுக்குங் கோலால் இட்டநிலம் இரண்டு . . .
3. வரி திணைக்கள நாயகம் மிழலைக் கூற்றத்து . . .
4. நற்கானாட்டு மேனெச்சியான தரணிவிச்சா . . .

இ. 1. ஸவந் திருவாரால . . .

2. ம் தோட்டமும் நத் . . . .

3. மெப்பேற்ப்பட்ட . . .

ஈ. 1. வதினெதிர் ஒன்பதாமாண்டு ஸ்ரீ தக. வெஷ்ணவ . . .

2. ளிசடகோபன் பாட்டு கேளா நிற்க நம் வீட்டிற்[கொ] . . .

3. யும்கருஞ்செயும் புன்செயும் நத்தமும் நத் . . .

4. னுக்கு காராண்மையாக குடுக்க வேண் . . .

உ. 1. ..வெ-ஜிமங்கலத்து . . . . .

2. தேவதான இறையிலியாக யிறுப் . . .

3. ஆசந்த்ராதித்யவற் செல்வதாக கல் . . . .

4. ந்த வேளாந் எழுத்து ||— ஸ்ரீஹவனச் . .

5. ட்டுவேண்டும் நிவந்தங்களுக்கு . . .

6. கோலால் மூன்றே ஒருமா நிலம் . . . .

ஊ. 1. ட்டு வி[ஸ]னம் பண்ணி வி[ஸ]னத்தலாற்றாதும் ஊரி . . .

2. டலில்லாமையால் இம்மண்டலத்து உத்தம சோழ வள . .

3. பண்ணப் பெறுவானாக இத்தேவர்க்குத் .. தேவதானம் ..

4. ல்லைநக்கனேரி மேலெல்லைக்கு வடக்கும் மேல் ..

5. சைந்த நான்கெல்லையுள் மேனோக்கிய மர ..

எ. 1. திருமோகூர் நின்றருளின பரமஸ்வாமிகள் கோ ..

2. த பாண்டியப் பேரேரிக் கீழ் ஒரு பக்க மடைய் . . .

3. கு நாச்சியார் பகவதியாழ்வார் ஸந்நிதிகளிற் திரும

4. அந்தராய முட்படத் திருநந்தவனப்புற இறையிலியா

ஏ. 1. செய்து குடுத்தோம் திருமோகூர் நின்றருளிய ..

2. லுக்கு எம்மிலிசைந்த விலைப் பொருளெங் . . .

3. தானம் இறுகிறபடி காராண்மை கைக் . . .

4. முதலில் வரியிட்டுக் கொள்ளப் பெறுவா ..

ஐ. 1. . . . . னாட்[டு]கழ . . . . .

2. ராஜ னெழுத்து இப்படிக்கு . புரவரிதிணை . . .

ஒ. 1. ஸ்வஸ்திஸ்ரீ புகழ்மாது . . . .

2. . . . . ஜெயாபிஷேகம் பண்ணி . . .

3. . . . . ராஜராஜ பாண்டி நாட்டு இராஜேந்த்ரே . . .

4. . . . விண்ணகராழ்வார் திருமுற்றத்து நாலாயிர

5. ம் ஒக்கக் கடமை குடிமை கொண்டு வந்து யாண் . . . .

மாவட்டம் : மதுரை
வட்டம் : மதுரை வடக்கு
ஊர் : திருமோகூர்
மொழி : தமிழ்
எழுத்து : தமிழ்
அரசு : பிற்காலப் பாண்டியர்
மன்னன் : —

ஆட்சி ஆண்டு : —
வரலாற்று ஆண்டு : கி.பி. 13 – ஆம் நூற்றாண்டு
இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை : —
முன் பதிப்பு : —
ஊர்க் கல்வெட்டு எண் : 13

இடம் : காளமேகப்பெருமாள் திருக்கோயில், முதல் திருச்சுற்று மேற்கு மதில்.

குறிப்புரை : இத்துண்டுக் கல்வெட்டுகள் அரச ஆணையில் கையொப்பமிட்ட பல அதிகாரிகளின் பெயர்களையும், இக்கோயில் அழகிய நாச்சியார் குறித்தும் தெரிவிக்கின்றன.

கல்வெட்டு :

அ. 1. வை கம்பன் உத்தம பாண்டிய விழுப்பரையன் எழுத்து இவை
2. யிராதராயன் எழுத்து இப்படி அறிவேன் நாட்டு கணக்கு க . . .

ஆ. 1. . . . . . றுபரவக . . . . . .
2. சையாயிரத்தளியிற் சோழவளவன் அறி
3. யுஞ் செய்ய தொ . . . . மய் கொண்டு செ
4. மேலயனுங்கு . . . . ய மாலும் றிய

இ. 1. டிக்கும் சாசனத்தின்படி
2. யார்க்கு . . . . . ண்மை . . . மிம்
3. வை . . . .
4. பியன் பல்லவரையன் எழுத்து இவை விழுப்பரைய . . . . .
5. ரன் எழுத்து உ

ௌ. 1. . . . . . .

2. ாசல்லமுயந்தராயத்துக்கு ு

3. . . . . இக்கோயில் தான

உ. 1. யார் அழகிய நாச்சியார்

2. ராகவும் பொன்வரிக்கு

3. க பாரது நாள் வி . . .

மாவட்டம் : மதுரை

வட்டம் : மதுரை வடக்கு

ஊர் : திருமோகூர்

மொழி : தமிழ்

எழுத்து : தமிழ்

அரசு : பிற்காலப் பாண்டியர்

மன்னன் : —

ஆட்சி ஆண்டு : —

வரலாற்று ஆண்டு : கி.பி. 13–ஆம் நூற்றாண்டு

இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை : —

முன் பதிப்பு : —

ஊர்க் கல்வெட்டு எண் : 14

இடம் : காளமேகப்பெருமாள் திருக்கோயில், தெப்பக்குளம் மண்டபம்.

குறிப்புரை : திருமோகூர் பெருமாளுக்கு இறையிலியாக நிலக்கொடை அளித்ததைப் பற்றிக் குறிப்பிடுகிறது இக்கல்வெட்டு.

கல்வெட்டு :

1. ஸபையோம் திருமோகூர் நின்றருளிய பரமஸ்வாமிகளுக்கு விற்று ஷமானம்
2. நிரண்டரையும் இறைத்ரவ்யத்துக்கு கொண்ட காசு பந்நிரண்டரையும்
3. ல்ல கொண்டு இன்னிலத்துக்கு வழியிறை வெட்டி வேதினை எச்சோற்றுக் . . .
4. ஸபையோமே யிறுக்க கடவோமாகவும் இப்பரிசு சந்த்ராதித்யவற் செல்
5. சேரி ஸ்ரீகனத்[து] அனஜ நாராயண ஹட்டன் பணிக்க இச்சேரி ஆத்ரயந் சோமாஜி
6. மஹாஸபையோம் (திருமோகூர்) நின்றருளிய பரமஸ்வாமிகள்

மாவட்டம் : மதுரை

வட்டம் : மதுரை வடக்கு

ஊர் : திருமோகூர்

மொழி : தமிழ்

எழுத்து : தமிழ்

அரசு : பிற்காலப்பாண்டியர்

மன்னன் : —

ஆட்சி ஆண்டு : —

வரலாற்று ஆண்டு : கி.பி. 13-ஆம் நூற்றாண்டு

இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை :

முன் பதிப்பு : —

ஊர்க் கல்வெட்டு எண் : 14

இடம் : காளமேகப்பெருமாள் திருக்கோயில், முதல்திருச்சுற்று, தெற்கு மதில் வெளிப்பக்கம்.

குறிப்புரை : திருமோகூர் கோயிலுக்கு நிலக்கொடை அளித்தது, துழாய்குடி நிலமளக்கும் கோல், நாச்சியார் பகவதியாழ்வார் பற்றியும், தானம் அளிக்கப்பட்டது பற்றியும் கூறும் துண்டுக் கல்வெட்டுகள்.

கல்வெட்டு :

அ 1. திரிபுவனச் சக்கரவர்த்திகள் . .
2. துழாய்[க்]குடியான சுந்தர . .
3. நாச்சியார் பகவதியாழ்வார் . .
4. கோலால் நிலம் இரண்டே . .
5. . . . தென் . . . .

ஆ 1. ந்தானஅ . . . .
2. நிலம் தீதஹரத்து இவ்வூர் கடமையிறுக் . . .
3. டினவும் உட்பட்டனவும் உட்பட நாலா . .
4. திருப்படிமாற்றுள்ளிட்டு வேண்டும் நிவந் . .
5. ய்யிரண்டு மாவும் காராண்மை மீயா . . .

இ 1. . . ன்மா நாட்டுத் . . .
2. . . னும் என்று . . .
3. . . மையிறுக்குங் . . .
4. . . தோளன் மு . . .
5. வது நாள் . . .

ஈ 1. யனழகனான வயி . .
2. ட்டுத் திருமோகூர் . .
3. களுக்கு . . கீழ்கள[ந்]கூ . .
4. ட்ச்சியும் தருவதா . .
5. ஐய்யன் மழவராயர் . .
6. க்கு இவர்க்கு கா . .

உ 1. ளுக்கு நாச்சியார் பகவதியாழ்வார்
2. ண்டே முக்காலே மூன்றுமா அம்ப . .
3. செய்வித்த[ரு]ளி குலசேகரன் திருனந்தவ
4. வியுந்தரச் சொன்னோம் இப்படி சந்திராதித்
5. . . . சாமந்தந் எழுத்து

மாவட்டம் : மதுரை

வட்டம் : மதுரை வடக்கு

ஊர் : திருமோகூர்

மொழி : தமிழ்

எழுத்து : தமிழ்

அரசு : —

மன்னன் : —

ஆட்சி ஆண்டு : —

வரலாற்று ஆண்டு : கி.பி. 13-ஆம் நூற்றாண்டு

இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை : —

முன் பதிப்பு : —

ஊர்க் கல்வெட்டு எண் : 15

இடம் : காளமேகப்பெருமாள் திருக்கோயில் உள்கோபுரம்

குறிப்புரை : துண்டுக் கல்வெட்டுகள். கி.பி. 13 மற்றும் 17-ஆம் நூற்றாண்டு எழுத்தமைதியில் உள்ளவை.

கல்வெட்டு :

அ. 1. . . . களுக்கு நம் . .
2. . . . நத்தமுந் தோட்டமுங்குளமும்
3. பேறும் மற்றும் எப்பெயர்ப் பட்டனவு
4. த்துக் காராண்மை மீயாட்சி . .

ஆ. 1. அப்பயங்கார்
2. சதாசேவை

மாவட்டம் :	மதுரை	ஆட்சி ஆண்டு :	8
வட்டம் :	மதுரை வடக்கு	வரலாற்று ஆண்டு :	கி.பி. 13-ஆம் நூற்றாண்டு
ஊர் :	திருமோகூர்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	332/1918
மொழி :	தமிழ்		
எழுத்து :	தமிழ்	முன் பதிப்பு :	—
அரசு :	பிற்காலப் பாண்டியர்		
மன்னன் :	சடையவர்மன் சுந்தரபாண்டியன்	ஊர்க் கல்வெட்டு எண்	16

இடம் : காளமேகப்பெருமாள் திருக்கோயில், தெற்குப்புற வெளிமதில் உட்பக்கம்

குறிப்புரை : தென்பறப்பு நாட்டுத் திருமோகூர் காளமேகப் பெருமாளுக்குத் திருப்பணிக்காகத் திருப்பணிப்புறத் திருவிடையாட்டமாக வீரநாராயணச் சதுர்வேதிமங்கலத்து நிலங்கள் இறையிலியாக அளிக்கப்பட்டதை இக்கல்வெட்டு தெரிவிக்கிறது இவ்வூர் நிலங்கள் சோழவந்தான் பகுதியில் இருந்துள்ளது. இக்கல்வெட்டில் எட்டாவது பாசன முதல் என்று பாசன ஆண்டும் (பசலி) குறிப்பிடப்படுகிறது.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ ஸ்வஸ்தி ஸ்ரீ திரிபுவனச்சக்கரவத்தி கோநேரின்மை கொண்டான் தென் பறப்பு நாட்டுத் திருமோகூர் நின்றருளிய பரமஸ்வாமிகள் கோயில் திருப்பதி வயிஷ்ணவர்

2. களுக்கும் ஸ்ரீபண்டிசன்யாசிகளுக்கும் இந்நாயனார்க்குத் திருப்பணிப் புற திருவிடையாட்டமாகப் பாகனூர்க் கூற்றத்து தேனூர் திருவேடகத்தில் வேறுபிறிந்த

3. வீரநாராயணச் சதுர்வேதிமங்கலமும் சாலை உள்ளிட்ட பற்றும் எட்டாவது பசான முதல் திருப்பணிப்புறத் திருவுடையாட்டமாகப் பண்டுடையாரும் பழங்காணியாள

4. ரும் தவிர்ந்து முதலடங்க இறையிலியாகக் குடுத்து இவ்வூர்களுக்கு வருவாய்க் கடமை அந்தராயம் பொன்வரி வினியோகம் வாசல்பேறு இலாஞ்சினைப்பேறு வெட்டிப் பா

5. ட்டம் பஞ்சுபீலி சந்திவிக்கிரகப் பேறு காரியவராய்ச்சி தறியிறை செக்கிறை தட்டொலி தட்டார்பாட்டம் ஏர்வரி இடைவரி இனவரி ஏரி மீன் பாட்டம் மற்றும் எப்பேற்பட்ட பல உ

6. பாதிகளும் தவிர்த்து இந்நாள் முதலுக்கு நம் வரியிலார் கணக்கிலுங் கழிப்பதாகச் சொன்னோம் இப்படிக்கு இவ்வோலை பிடிபாடாகக் கொண்டு இவ்வூர் காணி நான்கெல்

7. லையிலுந் திருவாழிக் கல்லும் நாட்டிக் கொண்டு சந்திராதித்தவற் செல்வதாகக் கல்லிலுஞ் செம்பிலும் வெட்டிக் கொண்டு திருப்பணி செய்து போதுக உ

8. இவை நெட்டூருடையானெழுத்து யாண்டு எட்டு நாள் உ௱அ௰௭ இவை சுந்தரபாண்டிய காலிங்கராயனெழுத்து உ ஸ்ரீமற்கீர்த்திக்கு மேல்

9. ஸ்ரீகோச்சடைய பன்மரான திரிபுவனச்சக்கரவத்திகள் ஸ்ரீசுந்தரபாண்டிய தேவற்கு யாண்டு எட்டாவது நாள் உ௱அ௰௭ இவை சுந்தரபாண்[டிய காலி]ங்கராயனெழுத்து உ

மாவட்டம் :	மதுரை	ஆட்சி ஆண்டு :	—
வட்டம் :	மதுரை வடக்கு	வரலாற்று ஆண்டு :	கி.பி. முதலாம் நூற்றாண்டு
ஊர் :	யானை மலை		
மொழி :	தமிழ்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	457/1906
எழுத்து :	தமிழ்	முன் பதிப்பு :	தெ.க.தொ.22 பகுதி 2
அரசு :	—		
மன்னன் :	—	ஊர்க் கல்வெட்டு எண்	1

இடம் : மலையின் உச்சியிலுள்ள இயற்கையான குகைத் தளம்.

குறிப்புரை : இவ குன்றத்தில் (யானை மலை) உறைவதற்காக இருப்பிடம் அமைத்தவன்எரி ஆரிதன் அத்துவாயி அரட்டகாயிபன் என்று இக்கல்வெட்டு கூறுகிறது. பா என்றால் படுக்கை என்று பொருள்.

கல்வெட்டு :

1. இவகுன்றத்தூ உறையுள் பா தந்தான் எரிஆரிதன்
2. அத்துவாயி அரட்ட காயிபன்

மாவட்டம் :	மதுரை	ஆட்சி ஆண்டு :	—
வட்டம் :	மதுரை வடக்கு	வரலாற்று ஆண்டு :	கி.பி. 9-10–ஆம் நூற்றாண்டு
ஊர் :	யானை மலை	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	67/1905
மொழி :	தமிழ்	முன் பதிப்பு :	தெ.இ.க.தொ.14 எண் 99
எழுத்து :	வட்டெழுத்து	ஊர்க் கல்வெட்டு எண்	2
அரசு :	—		
மன்னன் :	—		

கல்வெட்டு :

இடம் : குன்றின் மேற்குப்புறமுள்ள இயற்கையான குகைத் தளம், சமணச் சிற்பத்திற்குக் கீழேயுள்ளது.

குறிப்புரை : களவழி நாட்டு அணியன் என்பவன் நினைவாக ஏனாதி நாடி என்பவன் செய்வித்த திருமேனி என்று இக்கல்வெட்டு கூறுகின்றது.

கல்வெட்டு :

1. ஸ்ரீ களவழி நா
2. ட்டு . . . . . நா
3. . . . ட்டி அணிய
4. னை சாத்தி ஏனா
5. தி நாடி செய்
6. விச்ச திரு
7. மேனி

மாவட்டம் :	மதுரை	ஆட்சி ஆண்டு :	—
வட்டம் :	மதுரை வடக்கு	வரலாற்று ஆண்டு :	கி.பி. 9-10-ஆம் நூற்றாண்டு
ஊர் :	யானை மலை	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	68/1905
மொழி :	தமிழ்		
எழுத்து :	வட்டெழுத்து	முன் பதிப்பு :	தெ.இ.க.தொ.14 எண் 100
அரசு :	—		
மன்னன் :	—	ஊர்க் கல்வெட்டு எண்	3

இடம் : குன்றின் மேற்குப்புறமுள்ள இயற்கையான குகைத் தளம். சமண சிற்பத்திற்கு அடியில் உள்ளது.

குறிப்புரை : திணைக் களத்தார் பாதுகாப்பில் இத்திருமேனி விடப்பட்டதை இக்கல்வெட்டு கூறுகின்றது.

கல்வெட்டு :

1. ஸ்ரீ திணை
2. க்களத்தார்
3. ரக்ஷை

மாவட்டம் :	மதுரை	ஆட்சி ஆண்டு :	—
வட்டம் :	மதுரை வடக்கு	வரலாற்று ஆண்டு :	கி.பி. 10-ஆம் நூற்றாண்டு
ஊர் :	யானை மலை		
மொழி :	தமிழ்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	69 / 1905
எழுத்து :	தமிழ்		
அரசு :	—	முன் பதிப்பு :	தெ.இ.க.தொ. 14 எண் 101
மன்னன் :	—	ஊர்க் கல்வெட்டு எண்	4

இடம் : குன்றின் மேற்குப் புறமுள்ள இயற்கையான குகைத்தளம், சமண சிற்பத்திற்கு அடியில் உள்ளது.

குறிப்புரை : பொற் கோட்டுக் கரணத்தார் இதற்கு ஆதரவளித்ததனைக் கூறுகிறது.

கல்வெட்டு :

1. ஸ்ரீ பொற் கோ
2. ட்டுக் கரண
3. த்தார் ரக்ஷை

மாவட்டம் :	மதுரை
வட்டம் :	மதுரை வடக்கு
ஊர் :	யானை மலை
மொழி :	தமிழ்
எழுத்து :	வட்டெழுத்து
அரசு :	—
மன்னன் :	—
ஆட்சி ஆண்டு :	—
வரலாற்று ஆண்டு :	கி.பி. 9-10-ஆம் நூற்றாண்டு
இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	70/1905
முன் பதிப்பு :	தெ.இ.க.தொ. 14 எண் 102
ஊர்க் கல்வெட்டு எண்	5

இடம் : குன்றின் மேற்புறமுள்ள இயற்கையான குகைத்தளம். சமண சிற்பத்திற்கு அடியில் உள்ளது.

குறிப்புரை : இங்குள்ள தீர்த்தங்கரர், பரிவார புரவுவரியார் சிற்பங்களை அச்சணந்தி செய்வித்தார். இதற்கு காவல் அளித்து ஆதரவு தந்தவர் நரசிங்க மங்கலத்து ஊரவையினர் (சபையார்) என்று இக்கல்வெட்டு கூறுகிறது.

கல்வெட்டு :

1. ஸ்ரீ நரசிங்க மங்கலத்து
2. ஸபெயார் ரக்ஷை அச்சணந்
3. தி செய்வித்த திருமேனியும் பரிவார
4. புரவு வரியார் பேரமும்

மாவட்டம் : மதுரை

வட்டம் : மதுரை வடக்கு

ஊர் : யானைமலை

மொழி : தமிழ்

எழுத்து : வட்டெழுத்து

அரசு : —

மன்னன் : —

ஆட்சி ஆண்டு : —

வரலாற்று ஆண்டு : கி.பி. 9-10-ஆம் நூற்றாண்டு

இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை : 71/1905

முன் பதிப்பு : தெ.இ.க.தொகுதி 14 எண். 103

ஊர்க் கல்வெட்டு எண் : 6

இடம் : குன்றின் மேற்புறமுள்ள இயற்கையான குகைத்தளம். தீர்த்தங்கரர் சிற்பத்திற்குக் கீழ் உள்ளது.

குறிப்புரை : தென்களவழி நாட்டுப் பெருவேம்பற்றூர் என்ற ஊரைச் சார்ந்த செழியபாண்டி என்பவன் செய்வித்த இயக்கர் சிற்பம் என்று இக்கல்வெட்டு கூறுகிறது.

கல்வெட்டு :

1. தென் களவழி நாட்டு
2. ப் பெரு வேம்பற்றூர்ச் செ(ழு)
3. ழியப் பாண்டி செய்வி
4. ச இயக்[கர்*] பதும
5. ம் பரிவார[பேரம்]

மாவட்டம் :	மதுரை	ஆட்சி ஆண்டு :	—
வட்டம் :	மதுரை வடக்கு	வரலாற்று ஆண்டு :	கி.பி. 9-10-ஆம் நூற்றாண்டு
ஊர் :	யானைமலை	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	72/1905
மொழி :	தமிழ்		
எழுத்து :	வட்டெழுத்து	முன் பதிப்பு :	தெ.இ.க.தொ. 14 எண். 104
அரசு :	—	ஊர்க் கல்வெட்டு எண்	7
மன்னன் :	—		

இடம் : குன்றின் மேற்புறமுள்ள இயற்கையான குகைத்தளத்தில் சமண சிற்பத்திற்குக் கீழே உள்ளது.

குறிப்புரை : வெண்புநாட்டு வெண்புரை என்ற ஊரைச் சார்ந்த சாதன் ஆம்பிறையாயின சாதன் அரையன் என்பவன் செய்வித்த சிற்பம் என்று கூறுகிறது.

கல்வெட்டு :

1. ஸ்ரீ வெண்புரை நாட்டு வெண்
2. புரை சரதன் ஆம்பிறையா
3. னாஇன சாதன் அரையன் செய்
4. வித்த திருமேனிய்

மாவட்டம் :	மதுரை	ஆட்சி ஆண்டு :	—
வட்டம் :	மதுரை வடக்கு	வரலாற்று ஆண்டு :	கி.பி. 9-10-ஆம் நூற்றாண்டு
ஊர் :	யானைமலை	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	73/1905
மொழி :	தமிழ்		
எழுத்து :	வட்டெழுத்து	முன் பதிப்பு :	தெ.இ.க.தொ. 14 எண் 105
அரசு :	—	ஊர்க் கல்வெட்டு எண்	8
மன்னன் :	—		

இடம் : குன்றின் மேற்குப்புறமுள்ள இயற்கையான குகைத்தளம். சமணச்சிற்பத்திற்கு அருகில் உள்ளது.

குறிப்புரை : வல்லத்திருக்கை நாட்டைச் சேர்ந்தவன் ஒருவன் (ஊர்க் கொல்லன்) செய்வித்த சிற்பம் என்று கூறுகிறது.

கல்வெட்டு :

1. ஸ்ரீவல்லத்திரு
2. க்கை[1]ச் ச[து] .. ஊ
3. ர்க் கொ[ய்ய]ங்[2]
4. .. மி செய்வித்த
5. திருமேனி

1. 'வல்லத்திருக்கை' என்று படிப்பதே சரியானது.
2. 'கொல்லன்' என்று படிக்கலாம்.

மாவட்டம் :	மதுரை	ஆட்சி ஆண்டு :	—
வட்டம் :	மதுரை வடக்கு	வரலாற்று ஆண்டு :	கி.பி. 9-10 ஆம் நூற்றாண்டு
ஊர் :	யானைமலை	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	74/1905
மொழி :	தமிழ்		
எழுத்து :	வட்டெழுத்து	முன் பதிப்பு :	தெ.இ.க.தொ. 14 எண் 109
அரசு :	—	ஊர்க் கல்வெட்டு எண்	9
மன்னன் :	—		

இடம் : குன்றின் மேற்புறமுள்ள இயற்கையான குகைத்தளம், சமணச் சிற்பத்திற்கு அடியில் உள்ளது.

குறிப்புரை : வெண்பைக்குடிநாட்டு வெண்பைக்குடியிலுள்ள வேட்டஞ்சேரியில் இருக்கும் புதுமை எவியம் பூதி என்பவன் இங்குள்ள சிற்பத்தைச் செய்வித்ததையும் அதற்குப் புரவுவரித்திணைக்களத்தார் ஆதரவளித்துக் காத்தல் செய்ததையும் கல்வெட்டு கூறுகிறது

கல்வெட்டு :

1. ஸ்ரீவெண்பைக்கு
2. டி நாட்டு வெ
3. ண்பைக்குடி வே
4. டஞ்சேரி புதுமை
5. எவியம்[1] பூதி
6. செய்வித்த தி
7. ருமேனி இவை
8. புரவுவரி
9. க்களத்தா
10. ர் ரக்ஷை.

1. 'எலியம்' என்றும் படிக்கலாம்.

த. நா. அ. தொல்லியல் துறை தொடர் எண் : 158 / 2003

மாவட்டம் :	மதுரை	ஆட்சி ஆண்டு :	—
வட்டம் :	மதுரை வடக்கு	வரலாற்று ஆண்டு :	கி.பி. 8-ஆம் நூற்றாண்டு
ஊர் :	யானைமலை	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	66/1905
மொழி :	தமிழ்		
எழுத்து :	வட்டெழுத்து	முன் பதிப்பு :	தெ.இ.க.தொ. 14 எண். 98
அரசு :	—	ஊர்க் கல்வெட்டு எண்	10
மன்னன் :	—		

இடம் : முருகன் குடைவரைக் கோயில், வடக்கு வெளிச்சுவர்.

குறிப்புரை : இக்கல்வெட்டு வட்டக்குறிச்சி என்ற ஊரைச்சார்ந்த நம்பிரான் பட்டசோமாசி பரிவிராஜகர் என்பவர் இக்குடைவரைக் கோயிலைப் புதுப்பித்ததைக் குறிப்பிடுகிறது

கல்வெட்டு :

1. ஸ்ரீஸ்வஸ்தி புல்லா(தி)
2. வட்டக்குறிச்சி நம்பி
3. ரான் பட்ட சோமாசி பரி
4. விராச்ஜகர் புதுக்கு

மாவட்டம் :	மதுரை	ஆட்சி ஆண்டு :	—
வட்டம் :	மதுரை வடக்கு	வரலாற்று ஆண்டு :	கி.பி. 770
ஊர் :	யானைமலை	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	454/1906
மொழி :	தமிழ்		
எழுத்து :	வட்டெழுத்து	முன் பதிப்பு :	தெ.இ.க.தொ.14 எண் 2
அரசு :	பாண்டியர்	ஊர்க் கல்வெட்டு எண்	11
மன்னன் :	மாறஞ்சடையன் பராந்தக நெடுஞ்சடையன்		

இடம் : நரசிங்கப்பெருமாள் திருக்கோயில், குடைவரைக் கோயிலின் உட்புறச் சுவர்

குறிப்புரை : மாறஞ்சடையனின் உத்திரமந்திரியான மூவேந்தமங்கலப் பேரரையன் ஆகிய மாறன்காரி களக்குடி வைத்தியன் (வைத்திய குலத்தினைச் சார்ந்தவன்) இக் கற்றளியைச் செய்வித்துக் கொண்டிருக்கும்போது சொர்க்கலோகப் பதவியை அடைந்தான். அதன்பிறகு உத்திரமத்திரி பதவிக்கு வந்த அவன் தம்பி பாண்டி மங்கல விசைய அரையன் ஆகிய மாறன்எயினன் என்பவன் இக்கோயிலுக்கு முக மண்டபம் செய்து நீர்த்தெளித்தான் (குடமுழுக்கு) என்று இக்கல்வெட்டு கூறுகிறது.

கல்வெட்டு :

1. கோமாறஞ் சடையற்கு உ
2. த்தரமந்திரி களக்குடி வெ
3. ஈத்தியந் மூவேந்தமங்கலப்
4. பேரரையன் ஆகிய மாறங்
5. காரி இக்கற்றளி செய்து

6. நீர்த்தளியாதேய் ஜீர்ணோத்தாரோ

7. ஹணஞ் செய்த பின்னை அவ

8. னுக்கு ஸ்வராஜந் உத்தர

9. உத்ரவடி மெய்தின பாண்டி

10. மங்கல விசைஅரையன்

11. ஆகிய மாறன்னெறி

12. னன் முகமண்டபஞ் செ

13. ய்து நீர்த்தளித்தான்

மாவட்டம் :	மதுரை	ஆட்சி ஆண்டு :	—
வட்டம் :	மதுரை வடக்கு	வரலாற்று ஆண்டு :	கி.பி. 770 (கலி ஆண்டு 3871)
ஊர் :	யானைமலை		
மொழி :	சமஸ்கிருதம்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	453/1906
எழுத்து :	கிரந்தம்	முன் பதிப்பு :	தெ.இ.க.தொ. 14 பகுதி 1
அரசு :	முற்காலப்பாண்டியர்		
மன்னன் :	பராந்தக நெடுஞ்சடையன் (கி.பி.765-815)	ஊர்க் கல்வெட்டு எண்	12

இடம் : நரசிங்கப்பெருமாள் திருக்கோயில், குடைவரை உட்புறச்சுவர்.

குறிப்புரை : கலியுக ஆண்டு 3871ல் கரவந்தபுரம் என்ற ஊரைச் சார்ந்த மதுரகவி எனப்பட்ட மாறங்காரி இக்குடைவரைக் கோயிலை விஷ்ணுவிற்காக எடுப்பித்ததோடு பிராமணர் பலரைக் கொண்டு அக்கிரஹாரம் ஒன்றையும் அமைத்தான் என்று இக்கல்வெட்டு கூறுகின்றது. இதனை முற்றுவித்தவன் மாறன்காரியின் தம்பி மாறன்எயினன் ஆவான். இவ்விருவரும் பாண்டியனின் உத்திரமந்திரியாக விளங்கியவர்கள் ஆவர்.

கல்வெட்டு :

1. கரவந்த புரநிவாஸீ ஸ்ரீமாந் வைத்ய: ப்ரியா
2. மதுரகவி விஷ்ணோ: ஸுக்ருதக்ருத் யோ மதுரகவிரேஷ
3. ப்ரதமோ மா[ர]ாஸ்யஸிப்ரேஷ|| [க*]லிகீர்ஷணே
4. வஸுதிஶா நாணுஸ்ஸ்வராஞ காலியாந
5. ஸ்ய சதிநீ ஷ்வராஜ்ய: [ஸ்வாஹா]ஷ
6. உதாஹாரஷ வி||[வ]கயே: ஸஹஸ்ரதி
7. தயை ஸ்துமாவமெ [ம]தேஷணப-
8. த்யாரவி லெகஸலூதள க்ருதவ
9. திஷோ ஹமவாரு ஹக்ஷமாதிஹை
10. ஷ வெள ஷேஹநி ராஜிகாக்ஷ கெ||

மாவட்டம் : மதுரை
வட்டம் : மதுரை வடக்கு
ஊர் : யானைமலை
மொழி : தமிழ்
எழுத்து : வட்டெழுத்து
அரசு : சோழர்
மன்னன் : முதலாம் பராந்தகசோழன்

ஆட்சி ஆண்டு : 33
வரலாற்று ஆண்டு : கி.பி. 940
இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை : 63/1905
முன் பதிப்பு : தெ.இ.க.தொ. 3 பகுதி 3 எண் 10
ஊர்க் கல்வெட்டு எண் : 13

இடம் : நரசிங்கப்பெருமாள் கோயில், குடைவரையின் வடபுறமுள்ள பாறை.

குறிப்புரை : பராந்தகசோழனின் 33 ஆவது ஆட்சியாண்டில் (கி.பி. 940) சூரியகிரகணம் ஏற்பட்டபோது அவனது அதிகாரி புறங்கரம்பை நாட்டு மருதூர் மருதூருடையான் அருணிதிகலியன் என்பவன் யானைமலை நரசிங்கப்பெருமாளுக்குத் தானம் ஒன்றைச் செய்தான். இதன்படி கோயில் நிலத்திற்குரிய வரியை இவன் செலுத்தினான். கலியனேரி என்ற ஏரியை ஆழப்படுத்தி அதன் கீழுள்ள இருவேலி நிலத்திலிருந்து வந்த 300 கலம் நெல்லை கோயிலுக்கு ஆண்டுதோறும் அளித்து வரும்படிச் செய்தான். இதில் 150 கலம் நெல்லை கொண்டு நரசிங்கப் பெருமானடிகளுக்கு நாள்தோறும் கோயிலில் உச்சியம்போது வேதம் ஓதும் பிராமணர்கள் ஐவர்க்கு உயர்வகை உணவு அளிக்கப்பட்டது என்று இக்கல்வெட்டு கூறுகிறது. இக்கல்வெட்டில் ஈழக்காசும் புத்தக்கம் என்ற புதியகாசும் குறிப்பிடப் படுகின்றன. ஏழரைப் புத்தக்கம் ஒரு ஈழக்காசிற்குச் சமமானதாக இக்கல்வெட்டு கூறுகிறது.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ மதிரைகொண்ட கோப்பரகேசரிபன்மற்கு யாண்டு முப்பத்து மூன்றாவது இவ்வாண்டு [தே]வ[தா]னங் கீழிரணிய முட்[டத்]துப்படும் [பி]

2. ரம்மதேய[ம்] [ந]ரசிங்கமங்கலத்துச் சபையோம்ஞ்[1] சோழபெருமானடிகளதி காரிகள் சோழநாட்டுப் புறக்கரம்பைனாட்

3. டு மருதூர் மருதூருடையானருணிதி கலியனுக்கு ஒட்டிக் குட[த்]த[2] பரிசாவது எங்களூர்த் திருவா[னை]மலை நரசிங்கப்பெருமானடிகள்[த

4. முடைய நிலத்தால்ச் சபையோமுக்கு [ஆ]ண்டெடுத்து இடக்கடவ ஈழக்காசு பதினெட்டு இக்காசு பதினெட்டிலும்[3] மூன்றத் தெ[ா]ன்[று]ஈ

5. ழக்காசு ஆறு இவ்வாறு ஈழக்காசுக்கும் பலிசையாகச் சவையார் கைய்வழி குடுத்த ஈழக்காசு பதினைந்து பதினைஞ்சி னாலும் வந்த பலி

6. சையாவது ஈழக்காசின் வா[ய்]த் திங்கள் காற்புத்த[க்க]மாக ஒரோ திங்களா[ல்] வந்த புத்தக்க மூன்றேமுக்காலு(ம்) ஓராண்டு பந்திரண்டு தி

7. ஞ்களால்[4] வந்த புத்தக்கம் நாற்பத்தைஞ்சு நாற்பத்தைஞ்சினாலொரு ஈழக்காசுக்குப் புக்தக்கம் ஏழரை ஆக [ஈ]ழக்காசு [ஆ]று இவ்வாறு [ஈ]ழ

8. க்காசும் இறை நீக்கித் தேவர் சவையார்க்கு இடக்கடவ காசு ௰௨ பன்னிரண்டும் நீக்கி அதிகா[ரி]கள் மருதூருடையான் அருணிதி கலியன் இறைகாவலா[க] காத்த

9. காசி[னா]ல் வந்த நிலன் ஊருடையான் குளமான கலியனே[ரி]யும் இக்குளந்தா [மெ]ண்டுமாறு[5] கல்லிக் கரை நீளம் அட்டப் பெறுவதாகவும் [இ]

10. க்குளங்கரை உசர அட்டப்பெறுவதாகவும் இக்குளத்தினீர்[தா]ன் வேண்டு அளவுங் கோக்கப் பெறுவதாகவு மிக்குளம் இதன்கீழ் நீர்நில னிரு வே

11. லியு மருதூருடையருணிதிகலியன் விலைக்குக் கொண்டு இக்குளத்தின் கீழ் நீர்நிலனிரு வேலியி[னா]ல் வந்த போகம் அஞ்ஞாழிக் காலால் நெ[ல்]லு ஈா கலம்

12. இவையிற்றின் பாதி ாருப் நெல்லுங் கொண்[டு] [இ]வர்க்கு மூன்று சந்தியுந் திருவமிர்து செய்வதாகவும் நின்ற ா[ரும] நெல்லுங் கொண்டு திருவமிர்து உ

13 த்தம அக்கிரமாகத் தேவர் அமிது செய்யும் பொழுது வேதப் பிராமணர் நிசதம் அய்வர் அமிது செய்வதாகவும் வச்ச[ப]டி பத்தெட்டுக் குத்தல் ஒருவனு

14. க்கு அரிசி [இரு]நாழியுங் கறி மூ[ன்று]ம் தயிர் நா[ழி]யும் நெயிரு செவிடும் காயிலை இரண்டும் தாலமஞ்சும் வட்டிலஞ்சும் ஒட்டுட்டி ஒன்று

15. [ம்] சட்டுவம் ஒன்று அடுவா]ன்] னொருவ[னுக்]கு நிசதி நெ[ல்]லு அஞ்ஞாழி அறுதிங்க [ளொ]ரு புடவை வைச்சு இப்பரிசி இக்கலமூட்டுவ தாக இவ்

16. வாட்டை கற்கடக நாயிற்று வெள்ளிக்கிழமை பெற்ற ஆயிலெ[ய]த்தி னான்று சூ(ற்)றியக் கிரணவேளை[ள]க் [கு]றை கிராணம் பற்றின அன்று முதலாக இக்கல[ம்]

17. இ[ப்]பரிசேய் ஊட்டுவதாக நி[ன்]று சிறிகாறிய மாராய்கன்ற[6] திருவாய்ப் பாடி நாராயணனும் இவ்வூர்ச் சவையாரும் இப்பரிசேய் அக்கிர முட்டாமேய் ச[ந்]திராதி

18 தித்தவலம்[7] ஊட்டுவிப்போமானோம் திருவானைமலை நரசிங்கப் பெருமானடிகளுக்கு சிரிகாச்சிய ஆராய்வாரும்[8] சவயோமும் இதிற்றிரம்பி [னோ]மைச் சவைய்

19. யாலும்[9] [சி]ரிகா(ற்)றிய மாராய்வானுந்[10] திறமினான் நிசதி இறுகாசு அன்றாள் கோவினுக்குத் தண்டம்பட்டு அக்காசு கொண்டு தேவர்க்குத்

20. [த்] திறம்பில் [ஆ]றுகாசு தண்டப்படுவதாகவு[ம்] ஒட்டிக் குடுத்தோம் சவையோரும் சிரிகாச்சியமாராய்வானும்[11] மருதூருடையானருணிதி கலியனுக்கு இத்தண்டமிறு

21. த்து மித்தன்[மம்] முட்டாமே அய்வரை[யும்] சந்திராதிச்சர் உள்ளனவும் ஊட்டுவிப்போ மானோஞ் சவைய்யும் சிரிகார்ச்சியம் ஆராயும் வயிஷ்ணவ ரும் இதன்

22 [மம்] ரக்ஷித்தான்[12]

---

1. சபையோஞ்
2. குடுத்த
3. பதினெட்டிலும்
4. திங்களால்
5. இக்குளந்தான் வேண்டுமாறு
6. சிரீகாரியமாராய்கின்ற
7. சந்திராதத்தவலும்
8. சிரீகாரியமாராய்வாரும்
9. சபையாரும்
10. சிரீகாரியமாராய்வானும்
11. ,, ,,
12. முற்றுப்பெறவில்லை; தொடர்ந்து சில சொற்கள் இடம் பெற்றிருக்க வேண்டும்.

மாவட்டம் :	மதுரை	ஆட்சி ஆண்டு :	21
வட்டம் :	மதுரை வடக்கு	வரலாற்று ஆண்டு :	கி.பி. 11-ஆம் நூற்றாண்டு
ஊர் :	யானைமலை	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	64/1905
மொழி :	தமிழ்		
எழுத்து :	தமிழ்	முன் பதிப்பு :	தெ.இ.க.தொ. 14 எண் 168
அரசு :	சோழபாண்டியர்		
மன்னன் :	சடையவர்மன் சுந்தரசோழபாண்டியன்	ஊர்க் கல்வெட்டு எண்	14

இடம் : நரசிங்கப்பெருமாள் கோயிலுக்கு அருகிலுள்ள பாறை.

குறிப்புரை : இக்கல்வெட்டு திருவானைமலைமேல் எழுந்தருளியுள்ள நரசிங்கத்தேவர்க்குத் திருவிளக்கு எரிப்பதற்காக 'வெண் இரண்ணியன் சோலை' என்பவன் இருபத்தைந்து ஆடுகள் அளித்ததைக் கூறுகின்றது,

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ கோச்சடைய பந்மராந உடையார் ஸ்ரீ
2. சுந்தரசோழ பாண்டிய தேவற்கு யாண்டு உ௰க
3. கீ(ழி)ரணிய முட்டத்து மேல் வெண் இரண்ணிய
4. ன் சோலை திருவானைமலைய் மேல்எழுந்தருளிய நரசிங்கதேவர்க்கு வைச்ச வி
5 ளக்குக்கு வச்ச ஆளாக்கு நெய்(க்கு) வைச்ச ஆடு உ௰ரு இத்தேவர் வெட்டிக்குடி நக்கன் செண்
6. பகத் தேவன் இவ்வாடு உ௰ரு கொண்டு இத்தேவர்க்கு சந்த்ராதித்தவல் முட்டாமலட்டுவ
7. தானேன் நக்கன் செண்பகத்தேவன் நானும் என் வற்கத்தாரும் முட்டாமலட்டுவதானே
8. ன்—

மாவட்டம் :	மதுரை	ஆட்சி ஆண்டு :	7
வட்டம் :	மதுரை வடக்கு	வரலாற்று ஆண்டு :	கி.பி. 14-ஆம் நூற்றாண்டு
ஊர் :	யானைமலை		
மொழி :	தமிழ்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	—
எழுத்து :	தமிழ், கிரந்தம்		
அரசு :	பிற்காலப் பாண்டியர்	முன் பதிப்பு :	—
மன்னன் :	பராக்கிரம பாண்டியன்	ஊர்க் கல்வெட்டு எண்	15

இடம் : நரசிங்கப்பெருமாள் திருக்கோயில், மகாமண்டபம் தெற்குச்சுவர் வெளிப்புறம்

குறிப்புரை : யானைமலை நரசிங்கப்பெருமாளுக்கு விக்கிரமசிங்கபுரம் நகரத்தின் அருகிலுள்ள முத்துடையான் என்ற குளத்தினைத் திருவிடையாட்டமாக 'மக்கணாவன் மருமகன் 'மறக்கலங்காத்தான்' என்பவன் விற்றுக் கொடுத்ததை இக்கல்வெட்டு கூறுகிறது. அரச ஆணையோடு நரசிங்கப்பெருமாளும் சீவல்லவன் மண்டபத்துச் சேரனை வென்றான்பந்தல்கீழ் காலிங்கராயன் பீடத்தில் அமர்ந்திருந்து ஆணை வழங்கியதை இக்கல்வெட்டு கூறுகிறது.

கல்வெட்டு :

1. ஸ்ரீஸ்வஸ்திஸ்ரீ நரஸிம்ஹஸ்ய ஸ்ரீஸ்வஸ்திஸ்ரீ நிவாஸஸ்ய ஹதது ஸர்வஜமக வத்ஸ(ம) ப்ராஸத உதய ப்ராஸத ஸ்ரீபராக்கிரமபாண்டியதேவர்க்கு ௭வது ரிஷப நாயற்று அபரபக்ஷத்து த்ரயோதசியும் செவ்வாய்க்கிழமையும் பெற்ற சதையத்து நாள் சிங்கப்பெருமாள் திருவிடையாட்டம் விக்ரமசிங்கபுரத்து உட்படும் உள்ளூர்படும் முத்துடையானை முன்னாள் நகரத்தார் பக்கல் (மக்கணாவன்) கொள்ள கடமை இறுக்கும் படிக்கு

2. நாயினார் சிங்கப்பெருமாள் குடுத்தருளின திருமுகமும் வெண்பு நாட்டுத் திருநெல்வேலி கைக்கோளரில் வளத்தான் செண்பகப்பெருமாளுக்கு இம்மக்கணாவன் மருமகன் மறக்கல(க)ங்காத்தான் இக்குளமும் விற்று

முன்னாள் நாயனார் சிங்கப்பெருமாள் இருந்தருளின திருமுகங் குடுக்கையால் இற்றை நாள் இத்திருமுகப்படிக்குக் கல்வெட்டு ஸ்ரீமது ஸ்ரீ நரஸிம்ஹ . . . . . ஸாஸக: ஊதத் ஸ

3. வூ௨ஜமது வதூ௨ ஸாஸக௨ உதநூமாஸக௨ குலசேகரனுக்கு . . . . . நாயற்று சுவாு வக்ஷத்து உத்திரத்துக்கு நாம் புறப்பட்டு சீவல்லவன் மண்டபத்து சேரனைவென்றான் பந்தற்கீழ் காலிங்கராயன்பீடத்து இருந்து சடகோபன் பாட்டு கேளாநிற்க நம் வீட்டு கோவணரும் நகரத்தாரும் (அ)கம்படியாரும் நம் அடுக்களைப்புறமான வூர்களில் ஆதிச்சன் மக்கள் நகரத்தார்க்கு விற்றுக் குடுத்த முத்துடையானை திருகோவ

4. ணரும் நகரத்தாரும் குடுத்த வரிசைப்படியிலே கட்மை பொந்வரி கொள்ளவும் . . . . ன்னால் நம் அடுக்களைப்புறமான நிலங்களில் கொள்ளும் கடமையில் ஒன்று பாதி கொள்ளவும் பொன்வரி ஆண்டொன்றுக்கு அஞ்சுபணங் கொள்ளவும் சொன்னோம் இப்படிக்கு எக்காலமுஞ் செல்வதாகக் கல்லிலும் செம்பிலும் வெட்டிக் கொள்ள அருளால் திருமந்திரவோலைநாயகம் தென்பறப்பு நாட்டு திருப்புகழு ருடையான் மன்னன் மன்னனான நாராயண . . . . .

மாவட்டம் :	மதுரை	ஆட்சி ஆண்டு :	40
வட்டம் :	மதுரை வடக்கு	வரலாற்று ஆண்டு :	கி.பி. 14-ஆம் நூற்றாண்டு
ஊர் :	யானைமலை	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	—
மொழி :	தமிழ்		
எழுத்து :	தமிழ், கிரந்தம்	முன் பதிப்பு :	—
அரசு :	பாண்டியன்		
மன்னன் :	குலசேகரன்	ஊர்க் கல்வெட்டு எண்	16

இடம் : நரசிங்கப்பெருமாள் திருக்கோயில், மகாமண்டபம் தெற்குச்சுவர் வெளிப்பக்கம்.

குறிப்புரை : இக்கல்வெட்டு தெய்வச்சிலையான் இளையாழ்வானான சுந்தரபாண்டிய காலிங்க ராயன் என்பவன் புரவுவரிநல்லூர் என்ற ஊரை விலைக்கு வாங்கி நரசிங்கப் பெருமாளுக்குப் பூந்தோட்டம் செய்வதற்கு (காணி) இறையிலியாகத் தெய்வச் சிலையான் குழைகாதனுள்ளிட்டார்க்கு அளித்ததைக் கூறுகிறது.

கல்வெட்டு :

1. ஸ்ரீமது ஸ்ரீநரஸிம்ஹஸ்ய ஸ்ரீமது ஸ்ரீநிவாஸஸ்ய: ஸததது ஸர்வ்வ ஜயது வர்த்தமாஸஸ்ய
2. உத்யமாஸஸ்ய நம்குலசேகரனுக்கு யாண்டு [தநுர்]நாயற்று பூர்வபக்ஷத்து ஷஷ்டியு[ம்]
3. திங்கள் கிழமையும் பெற்ற ஸ்ரவிஷ்டத்து நாள் உ........ந [ஸிம்ஹலாதன்]
4. பீடத்து இருக்க நம்வீட்டுக் கோவணவரும் நம் ஸமவர்களில் ஸ்ரீசடகோப சேதனு(ம்)
5. நம் வீட்டில் பலபணியும் செய்விக்கிற சிங்கபிரான் தாதனும் வந்து கருங்குடி நாட்டு

6. கீழைநெட்டுரானக் கீர்த்திவிசாலயநல்லூர்ந் தெய்வச்சிலையான் கீழை யாழ்வானான

7. சுந்தரபாண்டிய காலிங்கராயன் (நகரத்தார்)பால் நம் அடுக்களைப் புறமான

8. உள்ளூர் பற்றில் புரவுவரிநல்லூரை விலைகொண்டு இறையாழ்வா னென்னும் பேரால்

9. நமக்கு பூந்தோட்டஞ் செய்கிற தெய்வச்சிலையான் குழைகாதறுள்ளிட் டார்க்கு இவன் கா

10. ணியாக இவன் குடுக்கையில் இந்த புரவுவரிநல்லூர் நான்கெல்லைக்குள் பட்டவை எப்பே

11. ற் பட்டனவும் முதலடங்க இறையிலியாகக் குடுக்க வேணுமென்று நமக்கு இவர்கள் சொல்லு

12. கையால் நாமும் இவூர் நான்கெல்லைக் குட்பட்டவை எப்பேற்பட்டதையும் முதலடங்க இறை

13. யிலியாகக் குடுத்து இப்படிக்கு வரியிலும் கழித்து நம் கோவணவர் ஓலையுங் குடுக்

14. கச் சொன்னோம் இப்படிக்கு இக்குழைகாதனுக்கும் இவன் வற்க்கத் தாற்கும் எக்காலமும் செல்வதாகச் கல்லிலுஞ் செம்பிலும் வெட்டிக் கொள்ள அருளால் திருமந்திர

15. ஓலை நாயகம் பொயிலுடையாந் திருக்காம்புரத்து சோலைமலை பிரான் திருமாலிருஞ்சோலைதாதன் எழுத்து

மாவட்டம் :	மதுரை	ஆட்சி ஆண்டு :	—
வட்டம் :	மதுரை வடக்கு	வரலாற்று ஆண்டு :	கி.பி. 1519 (சகாப்தம் 1441)
ஊர் :	யானைமலை	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	455/1906
மொழி :	சமஸ்கிருதம்		
எழுத்து :	கிரந்தம்	முன் பதிப்பு :	தெ.இ.க.தொ. 22 எண். 455
அரசு :	விஜயநகர வேந்தர்	ஊர்க் கல்வெட்டு எண்	17
மன்னன் :	கிருஷ்ண தேவராயர்		

இடம் : நரசிங்கப்பெருமாள் திருக்கோயில், மகாமண்டபம், மேற்குச் சுவர், வெளிப்பக்கம்.

குறிப்புரை : கிருஷ்ணதேவராயருக்கு வாசல் காரியம் செய்யும் திம்மப்பூவனையும் அவனது அலுவலர் மதுரநாதனையும் குறிப்பிடுகிறது. யானைமலையின் பெயர் கஜகிரி என் சமஸ்கிருதத்தில் குறிப்பிடப்படுகிறது.

கல்வெட்டு :

1. யஜ்ஞாஹ்வெ ஸூகாஸ்ய மஜமிரிநரஸிம்ஹ:
2. ஷ்ராத்ருஸ்ய வௌளஷெ ஸ்ரீஉ[த்]கி வாராயணா
3. ஸெத்ரு சகஸவ நவஶிகெ கரஷ்ணராயெ உஹூபெ
4. தகஸ்வாஸ்யெ திஉஉஹ்வெ கவிநாதஉயரா ரா
5. ஜ்ய நாயெ ஸ்வஸெபேரு ஷ்ராஉ ணெ[ந]க்ஷி
6. தஷ: கபருஉயி[க்ரு]தெ வாஸிநாயாயஉ த்ராகி

மாவட்டம் :	மதுரை	ஆட்சி ஆண்டு :	—
வட்டம் :	மதுரை வடக்கு	வரலாற்று ஆண்டு :	கி.பி. 12-ஆம் நூற்றாண்டு
ஊர் :	யானைமலை	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	—
மொழி :	தமிழ்	முன் பதிப்பு :	—
எழுத்து :	தமிழ்	ஊர்க் கல்வெட்டு எண்	18
அரசு :	பாண்டியர்		
மன்னன் :	சடையவர்மன் ஸ்ரீவல்லபன்		

இடம் : நரசிங்கப்பெருமாள் கோயில், மகாமண்டபம், வடக்கு உட்புறச்சுவர்.

குறிப்புரை : சடையவர்மன் ஸ்ரீவல்லபனின் 'திருமடந்தையும்' என்று தொடங்கும் மெய்க்கீர்த்தி காணப்படுகிறது.

கல்வெட்டு :

அ. 1. ஸ்ரீ திருமடந்தையும் ஜயமடந்தையும் திருப்புயங்க(ளி)

2. மன்னவரெல்லா [மகிழ்ந்திறைஞ்ச மரபிலே வருமுடி

3. (னைத்து செங்கோல் வளர) மன்னி வீரஸிம்ஹாஸத்து....

4. கோச்சடைய(வர்மரான) திரிபுவனச்சக்கரவத்திகள் ஸ்ரீவல்லப

ஆ. 1. வீரஸிம்ஹாஸநத்து ... (ங்கெ முத)

2. ஸ்ரீஸுந்தர பாண்டியதெவற்கு யாண்டு மு.....

3. செய்யதிருவாய் மொழிந்தருளி..

4. த கடமைக்குத் தலைமாறாக மாடக்குள

5. வேணுமென்று மழவராயனமக்குச் சொன்ன

மாவட்டம் :	மதுரை	ஆட்சி ஆண்டு :	—
வட்டம் :	மதுரை வடக்கு	வரலாற்று ஆண்டு :	கி.பி. 13-ஆம் நூற்றாண்டு
ஊர் :	யானைமலை	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	—
மொழி :	தமிழ்	முன் பதிப்பு :	—
எழுத்து :	தமிழ்	ஊர்க் கல்வெட்டு எண்	19
அரசு :	பாண்டியர்		
மன்னன் :	—		

இடம் : நரசிங்கப்பெருமாள் கோயில், மகாமண்டபம், வடக்குச் சுவர் உட்புறம்.

குறிப்புரை : நரசிம்ம ஆழ்வார்க்கு மூன்று மா மற்றும் வேலி நிலம் இறையிலியாக அளிக்கப்பட்டிருந்ததைத் தெரிவிக்கிறது.

கல்வெட்டு :

அ. 1. திருவாய் மொழிந்தருளி இவை மிழமைக் கூ . . .
2. தருளி ஸ்ரீ நாரஸிம்ஹ ஆழ்வார் கோயிலில் . . . .
3. மூன்று மாவும் ஆகக் காராண்மை விளையும் நில . . .
4. நிலம் வேலியும் பதின்கல வரிசை நிலத்தில்
5. தேவனான யாதவராஜ னெழுத்து யாண்டு ம்ச

ஆ. 1. .. (பப நிலம் . பரமேசுவரவதி) . . . .
2. . . . . (லையாகப்பா) . . . . .
3. முழுதுடையாளொடும் வீற்றிருந்தருளிய . . . . மாமுதல் மதிக்குலம்
4. ல்லவ செவற்கு யாண்டு அஞ்சாவது நாள்முன்னூற்றுநாற்ப
5. வேலூர்க் குளக்கீழ் ஸ்ரீகுந்தவைச் சதுவெதிமங்கலத்து
6. கூடியிருந்து இவூர் ஜடாதர

மாவட்டம் :	மதுரை	ஆட்சி ஆண்டு :	—
வட்டம் :	மதுரை வடக்கு	வரலாற்று ஆண்டு :	கி.பி. 13-ஆம் நூற்றாண்டு
ஊர் :	யானைமலை	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	—
மொழி :	தமிழ்		
எழுத்து :	தமிழ்	முன் பதிப்பு :	—
அரசு :	பாண்டியர்	ஊர்க் கல்வெட்டு எண்	20
மன்னன் :	—		

இடம் : நரசிங்கப்பெருமாள் கோயில், மகாமண்டபம், வடபுற உட்சுவர்

குறிப்புரை : இக்கல்வெட்டு நிலக்கொடை அளித்த அரச ஆணைபற்றிக் கூறுகிறது முத்தூற்றுக் கூற்றத்து மாசிலூர் குறிப்பிடப்படுகிறது.

கல்வெட்டு :

அ. 1. ஸ்வஸ்திஸ்ரீ கோனேரின்மை கொண்டான் . . . . . .

2. ஸபையார்க்குக் கீழிரண்ய முட்ட. . . . .

3. ழரை கோயிலில் (திருவீற்றயரும்) . . . .

4. முத்தூற்றுக் கூற்றத்து மாசிலூருடைய . . . .

5. ரணம் விற்றுக் குடுத்த தங்களூர் . . .

ஆ. 1. த்துயாவும் ஊர் நத்தத்துக்கும் இருகல . . . நிலம் . . .

2. விலையொற்றி யஉஉஷாதத்துக்கு . . . .

3. ள் முதல் வீரபாண்டிய[னி]ல் நெல்லு ஐங்கல . . . .

4. யநேன் இவை என் எழுத்து இக்கோயிலில் . . . .

5. கோயிலில் தேவர்கன்மி மாநவீரமதுரை வீர . . .

6. மை கொண்டான் தொண்டை மண்டலத்து . . . .

இ. 1. ாடைப்புற இ . . . . .

2. திட்ட உள்வரியும் . . . . . .

3. ா இராமனான பல்லவ . . . . .

4. . . . . . . லாவது . . . .

மாவட்டம் :	மதுரை	ஆட்சி ஆண்டு :	—
வட்டம் :	மதுரை வடக்கு	வரலாற்று ஆண்டு :	கி.பி. 13-ஆம் நூற்றாண்டு
ஊர் :	யானைமலை	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	—
மொழி :	தமிழ்		
எழுத்து :	தமிழ்	முன் பதிப்பு :	—
அரசு :	பாண்டியர்	ஊர்க் கல்வெட்டு எண்	21
மன்னன் :	—		

இடம் : நரசிங்கப்பெருமாள் கோயில், வடபுற வெளிச்சுற்று சுவர் உட்பக்கம்

குறிப்புரை : பிற்காலப்பாண்டியர் காலத்தைச் சேர்ந்த துண்டுக் கல்வெட்டுக்கள்.

கல்வெட்டு :

அ. 1. ட்டு . . . . . க்கண்டு . . . .
2. கொள்க வென்று . த்தி வென்று ..
3. புலவர் புகழ் மங்கலங்க . . . . .
4. த்துமுலக முழுதுடையான் . . . . .
5. கீழிரணிய முட்டத்து . . . . . .

ஆ. 1. இவ்வாணாதராயர் . . . . . . மாதந்தோறும் புறப்பட்ட . . .
2. சாத்தமங்கலத்திலும் கொண்டுவரும் வினியோகம்
3. இறையிலியிருப்பதாக இப்படி சந்திராதித்த
4. தொண்டைமானெழுத்து இட்டது இவை நாரா[யண]தேவர்

இ. 1. து மாநிலம் பதினாலாவது .. . . .
2. வரி யிறுப்பதாக இட்டு வாய
3. அண்டனாட்டுப் பெருமண
4. செய்விக்கிற திருவெ .. . . .

மாவட்டம் : மதுரை

வட்டம் : மதுரை வடக்கு

ஊர் : யானைமலை

மொழி : தமிழ்

எழுத்து : தமிழ்

அரசு : பாண்டியர்

மன்னன் : —

ஆட்சி ஆண்டு : —

வரலாற்று ஆண்டு : கி.பி. 13-ஆம் நூற்றாண்டு

இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை : —

முன் பதிப்பு :

ஊர்க் கல்வெட்டு எண் : 22

இடம் : நரசிங்கப்பெருமாள் திருக்கோயில், வடபுற வெளித் திருச்சுற்றுச் சுவர், உட்புறப் பகுதி.

குறிப்புரை : நரசிங்க ஆழ்வாருக்கு அளித்த தானம் பற்றிய துண்டுக் கல்வெட்டு. காலிங்கராயர் பெருமாளுக்கு (ஆழ்வார்க்கு) இத்தானத்தைத் தந்தவராகக் குறிப்பிடப்படுகின்றார்.

கல்வெட்டு :

அ. 1. பல்லவனும் அழகப்பெருமாளும் நியாய பரிபால . . . . .

2. யில் இவ்வாழ்வார்க்கு காலிங்கராயர் . . . .

3. கல்லிலும் செம்பிலும் வெட்டிவித்துக் கொள் . .

4. (திரிபுவனச் சக்கரவத்தி கோனேரின்மை . . . .)

ஆ. 1. ர்ந்த சினப்புலியுங் சிலையுங் குழைந்தோ . . .

2. கைப் பாடலுமிய . . . . . வெண்டிசை யளவுஞ் சக்கர

3. முகன் படைத்த மனுநெறி தழைப்ப மணிமுடிசூடிப் செ . . .

4. வந்தடையார் னிருபர் தந்தோகையர் அமுத கண்ணீராறு . . . . .

இ. 1. .... ததினிதறம் பெருக கருங்கலி கடிந்துெ .....

2. குச்சரர் வில்லவர் மகதர் விக்கலர் செம்பியர் பல் .....

3. ணை கைவளர வெஞ்சின விகுளியும் வேழமும் பரப்பி ...

4. சுரம் வோட்டி பைம்பொன் மணிமுடி பறிச்சு ....

ஈ. 1. மேல்கொண்டு ந .... வ்ய்ய

2. துலகந்தாங்கும் மாமேருவைக் குணந்து வைத்த

3. ருத்திரியம் விட படிக்கென்று இது பிடிபாடாகவே

4. னடிகைணத் பன்னிரு திருத்தோழ்மாலை கழித்தருள

உ. 1. ... செய்விக்கிற திரு .... களுக்கு இ .. து

2. டக்கல் மேலிரணிய முட்டத்துச் சிறுவாலியூரில்

3. . க் கூற்றத்து கீழ்கூற்று வெட்டனூருடையான்

4. வீற்றிருந்தருளிய ஸ்ரீநாரஸிம்ஹ ஆழ்வார் கோயில்

மாவட்டம் :	மதுரை	ஆட்சி ஆண்டு :	—
வட்டம் :	மதுரை வடக்கு	வரலாற்று ஆண்டு :	கி.பி. 9-10-ஆம் நூற்றாண்டு
ஊர் :	யானைமலை	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	72/1905
மொழி :	தமிழ்		
எழுத்து :	தமிழ்	முன் பதிப்பு :	தெ.இ.க.தொ. 14 எண். 10
அரசு :	பிற்காலப் பாண்டியர்	ஊர்க் கல்வெட்டு எண்	7
மன்னன் :	முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன்		

இடம் : நரசிங்கப்பெருமாள் திருக்கோயில், வடபுற வெளிச்சுவர், உட்பக்கம்.

குறிப்புரை : முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் சோழநாட்டு வெற்றியைக் கூறும் மெய்க்கீர்த்திப்பகுதி. முடிகொண்டசோழபுரத்தில் சுந்தரபாண்டியன் முடிசூடிக் கொண்டது, சிதம்பரத்தில் வழிபாடு செய்தது, பொன்னமராவதியில் சோழன் தனது முடியைப் பாண்டியனிடமிருந்து பெற்றது, முதலிய செய்திகள் இதில் குறிப்பிடப்படுகின்றன.

கல்வெட்டு

அ 1. புகழ் வரிந்து நாளும் . . . . நாமத்தால்
2. . பூங்கமல வாவி சூழ் பொன்னமராபதியிலே
3. . . . (முய்யம் இறை) விட்ட புகலிடத்தின் மார
4. நேத்தி வணங்கு வடகொங்கரை சிறை
5. வனேன் மாட மதுரையிற்றாள் பவனி

ஆ 1. றைசேரந்தணர் வாழ்தெய்வப்புலியூர் ரெல்லை
2. . .
3. திருமுகமும் பண்டிழந்த சோழ பதியேன் (ன்று ஸ்ரீ மரு

4. போழுங்கிள்ளீ தளைத்த் தென்றுணக்கீழ் தென் . . .

5. க் கொண்டிவ்வாறு செய்யாதொழிலே

இ 1. படிமங் கொண்டு போய் அய்யப்படாத

2. ச் சோணாடுந் தானிழந்த மாலை முடியு

3. முடிக்கத . . ற்றாளை . . பு . ந்தேன் விளங்கும் செங்கயல் (கொண்டு)

4. சொன்ன வெல்ஸ்லக் (கண்ிற்க) விசைந்த

ஈ 1. டியும் விருந்துண்ண (வர்கள் த)

2. . . பலத்து வெண்கவரி வித்திய வீரமும் கெடுத்துக்

3. புக்குத் திசைதொறும் செம்பொற் சேத்தம்பநாட்டி

4. ண்டசோழபுரத்து வீராபிஷேகமும் விசையாபிசே

5. செய்வானுந் செய்ய திருவாய் மொழிந்தருளினப

உ 1. . . . ணங்கவும் . . .

2. ரர்க் கொற்றனேழு வாளுயர் . . .

3. . ற்றித்திறற் கோபுரஞ்சூழ் முடிகொண்டசோழ புரத்து . . .

4. சோணாடுகொண்டிருளி முடிகொண்ட . . .

5. ஆழ்வார் கோயில் ஸ்ரீவைஷ்ணவ . . .

மாவட்டம் :	மதுரை	ஆட்சி ஆண்டு :	—
வட்டம் :	மதுரை வடக்கு	வரலாற்று ஆண்டு :	கி.பி. 13-ஆம் நூற்றாண்டு
ஊர் :	யானைமலை	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	—
மொழி :	தமிழ்		
எழுத்து :	தமிழ்	முன் பதிப்பு :	—
அரசு :	பிற்காலப் பாண்டியர்		
மன்னன் :	—	ஊர்க் கல்வெட்டு எண்	24

இடம் : நரசிங்கப்பெருமாள் திருக்கோயில், வடபுற வெளிச்சுவர், உட்பக்கம்.

குறிப்புரை : சிறுவாலியூரில் நிலக்கொடை அளித்ததையும், திருவோடைப்புறமாக இறையிலி அளிக்கப்பட்டதையும் கடமையிறுக்கும் கோலால் நிலம் அளக்கப்பட்டதையும் இத்துண்டுக் கல்வெட்டுகள் கூறுகின்றன.

கல்வெட்டு :

அ. 1. ட்டிவித்துக் கொள்க
2. கீழிரணிய முட்டத்து
3. முட்டத்துச் சிறுவாலி

ஆ. 1. செய்விக்கிற திரு . . . . களுக்கு இறுத்து
2. பக்கல் மேலிரணியமுட்டத்து சிறுவாலியூரில் . . .
3. லக்கூற்றத்து கீழ்கூற்று வேட்டனூருடையா . .

இ. 1. ணிய முட்டத்து சிறுவாலியூர்
2. யனுபவித்து வருகிற நிலத்தி
3. இவை மதுரோதைய வள
4. ராயர் சுந்தரபாண்டியன்

ஈ. 1. கடமை இறுக்கும் கோலால்
2. லத்து வோடைப்புற இறையிலி
3. தராஜன் எழுத்து இவை
4. திரையப் பெருமாள் எழுத்து

மாவட்டம் :	மதுரை	ஆட்சி ஆண்டு :	7
வட்டம் :	மதுரை வடக்கு	வரலாற்று ஆண்டு :	கி.பி. 13-ஆம் நூற்றாண்டு
ஊர் :	யானைமலை		
மொழி :	தமிழ்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	—
எழுத்து :	தமிழ்		
அரசு :	பிற்காலப் பாண்டியர்	முன் பதிப்பு :	—
மன்னன் :		ஊர்க் கல்வெட்டு எண்	25

இடம் : நரசிங்கப்பெருமாள் திருக்கோயில், வடக்கு வெளிச்சுற்றுச் சுவர், உட்பக்கம்.

குறிப்புரை : கோயிலுக்கு அளிக்கப்பட்ட நிலக்கொடை, திருமடைவிளாகம் அமைத்தது முதலிய செய்திகள் இத்துண்டுக் கல்வெட்டுக்களில் குறிப்பிடப்படுகின்றன. அரச ஆணையில் கையொப்பம் இட்ட அதிகாரிகளின் செயல்கள், கையொப்பம் இவற்றில் காணப் படுகின்றன.

கல்வெட்டு :

அ. 1. இவை தன.. ன்றமுடையான் எழுத்து இவை
2. து இவை மாம்தலைப் பிரான் எழுத்து இவை வான

ஆ. 1. யாண்டு முதல் வினியோகமும் வி
2. லுந் திருமடைவிளாகமுஞ் செய்வதான
3. ன் எழுத்திட்டு உள்வரியும் தரச் சொன்னோம்
4. ணலூர் அரையன் இர . . . யான் உத்தரம
5. லத்துப் பிடாகை ம . . . . .
6. இவ்வூர் கடமையிறுக்கும் கோலால். . .

இ. 1. காவிலே . . . .

2. .. முகடுதடவி மழை தடுக்குங் கா . .

3. காணா வோங்கு முரிமைக்கு யா . . .

4. க் கழலணிந்து விளங்கிய மணிய..

5. னூற்றிருபத் தொன்றினாலே செ..

ஈ. 1. . . . . . .

2. று மழவராயர் நமக்குச் (சொ)

3. டி சகூராஜித்தவற் செல்வ

4. னான பல்லவராயன் எழுத்து

உ. 1. .. (வெதிர்) கொள்ள

2. நெடும் பந்தற் கவந்தந்தி

3. ாருங்கே கைக் கொண்டு மு

4. .. ஸிம்ஹாஸனத்து . . . .

5. ம் மண்டலத்துக்குலோ . . . .

மாவட்டம் : மதுரை

வட்டம் : மதுரை வடக்கு

ஊர் : யானைமலை

மொழி : தமிழ்

எழுத்து : தமிழ்

அரசு : பிற்காலப் பாண்டியர்

மன்னன் : —

ஆட்சி ஆண்டு : —

வரலாற்று ஆண்டு : கி.பி. 13-ஆம் நூற்றாண்டு

இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை : —

முன் பதிப்பு : —

ஊர்க் கல்வெட்டு எண் : 26

இடம் : நரசிங்கப்பெருமாள் திருக்கோயில், மகாமண்டபம், தெற்குச் சுவர், வெளிப்புறம்.

குறிப்புரை : ஸ்ரீவல்லபன் அழகியமணவாளன் சோழகுலாந்தகச் சதுர்வேதி மங்கலத்தில் நிலக் கொடை அளித்ததையும், நரசிங்க ஆழ்வார்க்குத் திருநாளுக்கு வேண்டிய திருப்படித் தரங்களுக்குத் தேவதான இறையிலி நிலம் அளித்ததையும் இத்துண்டுக் கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன.

கல்வெட்டு :

அ. 1. உடையான் ஸ்ரீ வல்லபன் அழகிய மணவாளன்
2. பதினை நிலத்திலே பழம்பாடகப்படி இரண்
3. நமக்குச் சொன்னமையில் இவ்வாழ்வார்
4. சோழகுலாந்தகச் சருப்பேதி மங்கலத்திலே
5. உள்வரியும் நம்மோலையும் தரச்சொன்னோ ..
6. கவென திருவாய்மொழிந்தருளி . . . மிழலை

ஆ. 1. ஞ் செய்ய திருவாய் மொழிந்தருளினபடி இவ்வாழ்வார்
2. திருனாளுக்குத் திருப்படி மாற்றுள்ளிட்டு வேண்டும் நிவ
3. ராயமும் வினியோகமும் உட்பட தேவதான
4. காரியர் கண்ட . . . க்குத் திருப்படி மாற்றுள்ளிட் . . .
5. ண்டு முதல் அந்தராயமும் வினியோகமும் உட்படத் தேவதான

மாவட்டம் :	மதுரை	ஆட்சி ஆண்டு :	—
வட்டம் :	மதுரை வடக்கு	வரலாற்று ஆண்டு :	கி.பி. 13-ஆம் நூற்றாண்டு
ஊர் :	யானைமலை	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	—
மொழி :	தமிழ்		
எழுத்து :	தமிழ்	முன் பதிப்பு :	—
அரசு :	பிற்காலப் பாண்டியர்		
மன்னன் :	—	ஊர்க் கல்வெட்டு எண்	27

இடம் : நரசிங்கப்பெருமாள் திருக்கோயில், மகாமண்டபம், வடபுற உட்சுவர்.

குறிப்புரை : திருவானைமலையில் வீற்றிருந்தருளிய நரசிங்கஆழ்வார் புறப்பாடு செய்யும்போது ஆகும் திருப்படித்தரத்திற்காக இறையிலியாக நிலம் அளிக்கப்பட்டதைத் தெரிவிக்கின்றது.

கல்வெட்டு :

1. ட்டத்து திருவானைமலை வீற்றிருந்தருளிய ஸ்ரீ நரஸிம்ஹஆழ்வார் கோயில் திருப்பதி ஸ்ரீவை . . .
2. தோறும் புறப்பட்டருளத் திருப்படிமாற்று உள்ளிட்டு வேண்டும் நிவந்தங்களுக்கு இவ்வாண்டு . . . .
3. லத்திலும் கொண்டு வரும் வினியோகமும் தருவதான அச்சும் காரிய வாராய்ச்சியும் . . .
4. முதல் தேவதான இறையிலியா . . . . இடப்பெற வேணுமென்று ஐயன் மழவராயன் ...

ஆ. 1. உள்ளிட்டு வேண்டும் நிவந்தங்கள் செல்ல
2. இவை மிழலைக்கூற்றத்து நடுவிற்
3. ன் வெண்காடுதேவன் காரோணமுடைய
4. வை.. நரசிங்கஆழ்வார் கோயில் நம்புசெய்

மாவட்டம் : மதுரை
வட்டம் : மதுரை வடக்கு
ஊர் : யானைமலை
மொழி : தமிழ்
எழுத்து : தமிழ்
அரசு : பிற்காலப் பாண்டியர்
மன்னன் : —

ஆட்சி ஆண்டு : —
வரலாற்று ஆண்டு : கி.பி. 13-ஆம் நூற்றாண்டு
இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை : —
முன் பதிப்பு : —
ஊர்க் கல்வெட்டு எண் : 28

இடம் : நரசிங்கப்பெருமாள் திருக்கோயில், மகாமண்டபம்.

குறிப்புரை : கீழிரணியமுட்டத்துத் திருவானைமலை வீற்றிருந்தருளிய நரசிங்க ஆழ்வார்க்கு நிலம் அளித்தது, அதன் எல்லைகள் பற்றிக் கூறுகின்றது.

கல்வெட்டு :

அ. 1. ஸ்வஸ்திஸ்ரீ கோநேரின்மை கொண்டான் .. ... .
2. ணியனூர்க்குக் கீழ்இரணியமுட்டத்துத் திருவானைமலை மேல் வீற்றிருந்தருளிய நரஸிம்ஹ .. ... .
3. .. .... நரசிங்கமங்கலத்து .. ... .
4. குடி .... க்கிற கல்லுக்கு மேற்கும் தென்னெல்லை நரசிங்கமங்கலத்து
5. .... கு வடக்கும் மேலெல்லை .....

ஆ. 1. வாய்ப் பொற்சூலக் (கைவல்ல பலகொள்க) ....
2. து வஞ்சி முதலான மொய்வளையர் மோங்கு புனற் கும்ப முதல் ....
3. யா வில்குழை யரிவையர் தொழுதுள்(ளியேத்து) முலகமுழுதுடையா ....
4. ... யிருந்து கீழிரணியமுட்டத்துத் திருவானைமலை வீற்றிருந்த .....
5. ரல் பன்னிருகல வரிசை நிலத்தில் நிலம் வேலியும் ....
6. கூற்றத்து ஸ்ரீவல்லபமங்கலத்தில் ஒரு .....

மாவட்டம் :	மதுரை	ஆட்சி ஆண்டு :	—
வட்டம் :	மதுரை வடக்கு	வரலாற்று ஆண்டு :	கி.பி. 1892
ஊர் :	யானைமலை	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	—
மொழி :	தமிழ்	முன் பதிப்பு :	—
